வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu — ஈழநாடு




Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 24.07.2025 வியாழக்கிழமை இதழ் : 205 பக்கங்கள் : 12

# வரலாற்றை மறைக்கவும் மாற்றவும் அரசு முயல்கிறது

## பாராளுமன்றில் கஜேந்திரகுமார் எம். பி.

கொழும்பு, ஜூலை 24

வரலாற்றை மறைக்கவும் - மாற்றியமைக்கவும் தற்போதைய அரசாங்கம் முயல்கிறது - என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.



மேலும், "1983ஆம் ஆண்டு அப்போதைய அரசாங்கத்தின் உந்துதலுடன் கொழும்பு உட்பட வடக்கு - கிழக்குக்கு வெளியே திட்டமிடப்பட்டு தமிழர்கள் வேட்டையாடப்பட்டனர். இராணுவத்தினரும் பொலிஸாரும் இதற்கு ஒத்துழைப்பு வழங்கியிருந்தனர். சில சாதாரண சிங்கள மக்கள், தங்களின் நண்பர்களை பாதுகாப்பதற்காக தங்களால் முடிந்தளவு, தமிழ் மக்களை மறைத்து வைத்திருக்கவும் உதவியிருந்தனர்.

"தற்போதைய அரசாங்கம் தங்களை சகல சந்தர்ப்பங்களிலும் இனவாதிகள் இல்லை என்று கூறி வருகிறது. எனினும், வடக்கு - கிழக்கு மக்கள் கறுப்பு ஜூலை தினத்தை நினைவுகூரும் இன்றைய தினம் (நேற்று) அரசாங்கம் தெற்கில் இருந்து இளைஞர் குழுக்களை வடக்குக்கு அனுப்புகிறது. அந்த நினைவு கூரலை முழுமையாக மாற்றியமைக்கும் வகையில் சகோதரத்துவம் 11



## கொழும்பிலிருந்து ரயிலில் யாழ்ப்பாணம் வந்தது குழு!

### பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்பு

- த.பிரதீபன் -

கொழும்பு, ஜூலை 24

பிரகடனப்படுத்தப்பட்ட சகோதரத்துவ தினத்தை முன்னிட்டு சோஷலிச இளைஞர் அமைப்பினர் நேற்றைய தினம் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு ரயிலில் வந்தனர்.

கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்திலிருந்து நேற்று காலை பயணத்தை ஆரம்பித்த 11

சம்பூரில் மனித எச்சங்கள்:

## அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது!

திருகோணமலை, ஜூலை 24

திருகோணமலை சம்பூரில் அடையாளம் காணப்பட்ட மனித எச்சங்கள் தொடர்பில் எதிர்வரும் 30ஆம் திகதி அறிக்கை சமர்ப்பிக்குமாறு சட்ட மருத்துவ அதிகாரி, தொல்பொருள் திணைக்களத்துக்கு மூதூர் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நேற்றைய தினம் மனித எச்சங்கள் மீட்கப்பட்ட பகுதியை பார்வையிட்ட பின்னர் மூதூர் நீதிவான் நீதிமன்ற நீதிவான் எச். எம். தஸ்னீம் 11



அரியாலை புதைகுழி:

## நேற்றும் 5 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டன

- த. பிரதீபன் -

யாழ்ப்பாணம், ஜூலை 24

அரியாலை மனித புதைகுழியில் நேற்றைய தினம் 5 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டன. இதன் மூலம், இந்தப் புதைகுழியில் அடையாளம் காணப்பட்ட மனித எலும்புக்கூடுகளின் எண்ணிக்கை 85ஆக உயர்வடைந்துள்ளது.

இதேநேரம், நேற்றைய தினம் காப்பு என்று சந்தேகிக்கப்படும் வளையம் ஒன்றும் புதைகுழியில் அடையாளம் காணப்பட்டுள்ளது.

அரியாலை - சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடை யாளம் காணப்பட்ட மனிதப் 11

## பிள்ளையானின் மனு விசாரணைக்கு ஏற்பு

கொழும்பு, ஜூலை 24

பிள்ளையான் என்று அறியப்பட்ட முன்னாள் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன், தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள உயர் நீதிமன்றம் நேற்று தீர்மானித்தது.

தாம் கைதுசெய்து தடுத்து வைக்கப்பட்டுள்ளதன் மூலம் தமது அடிப்படை உரிமைகள் 11



வரலாற்று பிரசித்திபெற்ற மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய தேர்த் திருவிழா நேற்று இடம்பெற்ற வேளை...!

(மேலும் படங்களும் செய்தியும் பக்கம் 2இல்)

## காங்கேசன் துறைமுகத்தின் அபிவிருத்தியில் தாமதம் ஏன்?

### சிறீதரன் எம். பி. கேள்வி

கொழும்பு, ஜூலை 24

காங்கேசன்துறை துறைமுகத்தின் அபிவிருத்திக்கு மீளச்செலுத்தத் தேவையற்ற 6.5 கோடி டொலர்களை இந்தியா வழங்க முன்வந்துள்ளது. ஆனாலும், இந்தத் துறைமுகத்தை மீள இயக்குவதற்கான சூழலியல் தாக்க மதிப்பாய்வு அறிக்கையும் தயாரிக்கப்பட்டுள்ளது. இதன் பின்னரும் இந்தத் துறைமுகத்தின் அபிவிருத்தி காலம் தாழ்த்தப்படுவதற்கான காரணம் என்ன - இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன்.

நேற்றைய தினம் பாராளுமன்றத்தில் அந்தத் 11

## பாரம்பரிய பரீட்சைக்கு பதில் தொகுதி முறை கல்வி திட்டம்

### பிரதமர் ஹரிணி அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 24

கல்வியை அளவிடும் பாரம்பரிய பரீட்சை முறைக்கு மாற்றாக தொகுதி முறை கல்வித் திட்டம் அறிமுகப்படுத்தப்படும் என்று கல்வி, உயர்கல்வி அமைச்சரும் பிரதமருமான ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார். இதன் முக்கிய நோக்கம் மாணவர்களுக்கு தரமான கல்வியை வழங்குவதாகும் என்றும் 11

# ரணில் பிறப்பித்த அவசரகால சட்டம் அடிப்படை மனித உரிமை மீறலாகும்

## உயர் நீதிமன்றம் தீர்ப்பு

கொழும்பு, ஜூலை 24

பதில் ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியிலிருந்தபோது கடந்த 2022 ஜூலை 17ஆம் நாள் நாடு முழுவதும் அறிவித்த அவசரகால சட்டம் அரசமைப்புக்கு விரோதமானது - அடிப்படை மனித உரிமைகளை மீறியது என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

மூன்று நீதியரசர்கள் ஆயத்தின் பெரும்பான்மையினரின் தீர்ப்பு, "பொது பாதுகாப்பு சட்டத்தின் பிரிவு 2இன் கீழ் பிரகடனப்படுத்தப்பட்ட அவசரகால சட்டம் தன்னிச்சையானது - அதிகார மற்றது."

தலைமை நீதியரசர் முர்து பெர்னாண்டோ, நீதியரசர் யசந்த கோடகொட ஆகியோர் மேற்கண்டவாறு தமது தீர்ப்பில் தெரிவித்துள்ளனர்.

நாட்டில் குறிப்பாக, தென்னிலங்கையில் அறகலய இயக்கத்தின் போராட்டங்கள் உச்சத்திலிருந்த நேரத்தில் விதிமுறைகள் இயற்றப்பட்டு - அவசரகால சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டது. 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கின் காணி பிரச்னைகள் பலவற்றுக்கு தீர்வு எட்டப்பட்டது

## ஆளுநர் செயலகத்தில் நேற்று நடந்த கூட்டத்தில்



யாழ்ப்பாணம், ஜூலை 24

வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகனின் அழைப்பின்பேரில் வருகை தந்த, காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் தலைவர் ஆர். கே. நிஹாலின் பங்கேற்புடன் வடக்கு மாகாணத்திலுள்ள காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் காணிகள் தொடர்பான பல்வேறு பிரச்னைகளுக்கு நேற்று நடந்த கூட்டத்தில் தீர்வுகள் காணப்பட்டன என்று ஆளுநர் செயலகம் குறிப்பிட்டுள்ளது.

வடக்கு ஆளுநர் செயலகத்தில் நடந்த இந்தக் கூட்டத்தில், காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் தலைவர் உள்ளிட்ட குழுவினர், வடக்கு மாகாண ஆளுநரின் செயலர், வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், மாவட்ட செயலாளர்கள், மேலதிக மாவட்ட செயலாளர்கள் - காணி, பிரதேச செயலாளர்கள், தென்னை அபிவிருத்தி சபை உள்ளிட்ட பல்வேறு திணைக்களங்களின் தலைவர்களும் பங்கேற்றனர்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய 5 மாவட்டங்களினதும் பிரச்னைகள் தனித்தனியாக ஆராயப்பட்டு தீர்வு காணப்பட்டன. இதன்போது ஏனைய அரச திணைக்களங்களுடனான காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் காணி தொடர்பான பிரச்னைகளுக்கும் தீர்வு காணப்பட்டன.

படைகள் வசமுள்ள காணி, மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் காணி, வனவளத் திணைக்களம், வனஉயிரிகள் திணைக்களம் வசம் உள்ள காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் காணிகள் என்பனவற்றை ஆளுநர் ஊடாக விடுவிக்கக் கோருவது என்று இதன்போது தீர்மானிக்கப்பட்டது.


அத்துடன் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்குச் சொந்தமான காணிகளில் வசிப்போருக்கான உறுதிப் பத்திரங்கள் அடுத்த மாதம் வழங்கப்படும் என காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தார்.

மேலும், காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்குச் சொந்தமான காணிகளிலிருந்து மணல் அகழ்வுக்கான அனுமதி ஒருபோதும் வழங்கப்படாது எனவும் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் காணியை குத்தகைக்குப் பெற்றுக் கொண்ட வேறு திணைக்களங்களும் அதனை முன்னெடுப்பதற்கான அனுமதி வழங்கப்படாது என்றும் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் தலைவர் குறிப்பிட்டார்.

மேலும் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் காணிகளை புதிதாக வழங்குவது மற்றும் அதனை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகளை மாவட்டச் செயலர்கள் தலைமையில் முன்னெடுக்குமாறும் ஆணைக்குழுவின் தலைவர் பணித்தார்.

மன்னார் மாவட்டத்திலேயே அதிகளவான சிக்கல்கள் அவதானிக்கப்பட்டன. காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்கு சொந்தமான 90 ஏக்கர் காணியை தனி ஒரு நபர் மன்னாரில் பயன்படுத்துவதும் இந்தக் கலந்துரையாடலில் வெளிப்படுத்தப்பட்டது. அது தொடர்பில் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் சட்டப்பிரிவு ஊடாக அணுகுவதாக ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தார். மன்னார் மாவட்டம் தொடர்பில் விசேட கவனம் செலுத்துவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

(ஐ-05)



# கறுப்பு ஜூலை நினைவேந்தல் யாழ். பல்கலையில் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 24

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கறுப்பு ஜூலை நினைவுதினம் நேற்று உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

பல்கலைக்கழக பிரதான வளாகத்தில் கறுப்பு ஜூலை நினைவுருவ படத்துக்கு மாணவர்களால் அகவணக்கம் செலுத்தப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

1983 கறுப்பு ஜூலை வாரத்தில் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் தொடர்பான நினைவுரையும் இதன்போது ஆற்றப்பட்டது. நினைவேந்தலில் பல்கலைக்கழக மாணவர்கள் பலரும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

(ஐ)

# படுகொலையான தமிழ் மக்களுக்கு கரவெட்டி பிரதேச சபையில் அஞ்சலி

வடமராட்சி, ஜூலை 24


செம்மணியில் படுகொலை செய்யப்பட்ட மக்களுக்கும் கறுப்பு ஜூலை தினத்தில் மெழுகுவர்த்தி ஏந்தி கரவெட்டி பிரதேச சபை உறுப்பினர்கள் அஞ்சலி செலுத்தினர்.

கரவெட்டி பிரதேச சபையின் அமர்வு நேற்று புதன்கிழமை தவிசாளர் கு. சுரேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

உப தவிசாளர் தி. தயாபரன் "செம்மணியில் கொல்லப்பட்ட மக்களுக்காகவும் கறுப்பு ஜூலை கலவர காலத்தில் படுகொலை செய்யப்பட்ட மக்களுக்காகவும் மெழுகுவர்த்தி ஏந்தி அஞ்சலி செலுத்துமாறு கோரிக்கை விடுத்தார்.

இதைத் தொடர்ந்து, சபைக்கு சமுகமளித்திருந்த 30 உறுப்பினர்களும் மௌன அஞ்சலி செலுத்தியதுடன் மெழுகுவர்த்தி ஏற்றியும் அஞ்சலி செலுத்தினர். இதேசமயம், சபைக்கு வருகை தந்த ஆளும் கட்சி உறுப்பினர்கள் கறுப்பு பட்டி அணிந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ-02)

# தேரேறி அருள் பாலித்தான் மாவை கந்தன்





யாழ்ப்பாணம், ஜூலை 24

வரலாற்று பிரசித்தி பெற்ற மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழாவின் பஞ்சரத திருவிழா நேற்று புதன்கிழமை பக்திபூர்வமாக நடைபெற்றது.

விசேட பூஜை வழிபாடுகளை தொடர்ந்து விநாயக பெருமான், முத்துகுமாரசுவாமி, சிவன் - பார்வதி, சண்முகப் பெருமான், சண்டேசுவரர் ஆகிய பஞ்சமூர்த்திகள் உள்வீதி வலம் வந்து பஞ்ச இரதங்களில் ஆரோகணித்தனர் உலா வந்தனர்.

நேற்றைய திருவிழாவில் பல்வேறு இடங்களிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்றனர். அத்துடன் அவர்கள் காவடி, கற்பூரசட்டி ஏந்தல், அங்கபிரதிஷ்டை செய்தும் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றினர்.

கடந்த 30 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமான பெருந்திருவிழா இன்றைய தினம் தீர்த்தோற்சவத்துடன் [illegible] என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-03)

# கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் கற்பித்தல் உபகரண கண்காட்சி!



யாழ்ப்பாணம், ஜூலை 24

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் பயிலும் கணித, விஞ்ஞான நெறி ஆசிரிய மாணவர்களின் ஏற்பாட்டில் கற்பித்தல் உபகரண கண்காட்சி நேற்று புதன்கிழமை காலை 9:30 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்றது.

கலாசாலை அதிபர் சந்திர மௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக புத்தூர் சிறீ சோமாஸ்கந்தக் கல்லூரி அதிபர் சின்னத்தம்பி திரிகரன் கலந்து கொண்டார்

தேசியக்கொடி, கலாசாலை கொடி என்பன ஏற்றப்பட்டதைத் தொடர்ந்து, மங்கல விளக்கு ஏற்றப்பட்டு நிகழ்வுகள் ஆரம்பமாயின. கற்பித்தலில் கண்காட்சியின் அவசியம் என்ற பொருளில் விஞ்ஞான நெறி ஆசிரிய மாணவர் இ. செந்தூர்ச்செல்வன் உரையாற்றினார்.

விஞ்ஞான நெறி ஆசிரிய மாணவி தேவராசா கீற்றா நிகழ்வுகளை முன்னிலைப் படுத்தினார். தி. அ. பெலினி நன்றியுரை ஆற்றினார்.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அதிபர் சி. திரிகரன் கலாசாலை முகாமைத்துவ குழுவினரால் கௌரவிக்கப்பட்டார்.

கண்காட்சியை ஆசிரிய மாணவர்களுடன் அயல் பாடசாலைகளின் மாணவர்களும் பார்வையிட்டனர்.

(ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
24.07.2025 வியாழக்கிழமை
விசுவாவசு வருடம், ஆடி 08

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# செம்மணியில் ஒன்றுபடுதல்

இறுதி யுத்தத்தை அடிப்படையாகக் கொண்ட பொறுப்புக்கூறல் விடயத்தில் எதுவும் நடக்கவில்லை. இனியும் நடக்குமென்று வாதிட முடியாது. ஆனால், செம்மணி விவகாரம் அவ்வாறான ஒன்றல்ல. மனிதப் புதைகுழி ஒரு வலுவான ஆதாரம் - அதிலும் குறிப்பாக சிறுவர்களின் எலும்புக்கூடுகள் உள்ளிட்ட அடையாளங்கள் கண்டுபிடிக்கபட்டிருக்கின்றமை உலகளவில் கொண்டு செல்லக்கூடிய விவகாரம். யுத்தத்தின்போது இடம்பெற்றால் அதற்கு வேறு விளக்கங்களை வழங்க முடியும். தற்போது காஸாவில் நடைபெறுவது அதுதான். மேலும், காஸாவின் அரசியல் தொடர்பு முற்றிலும் வேறானது. இரண்டையும் ஒப்பிட்டு தங்களின் வித்துவச் செருக்கையும் சில அரசியல்வாதிகள் காண்பித்த கதையுமுண்டு.

அவ்வாறான கதைகளை விடுத்து யுத்தம் முடிவுற்று பதினாறு வருடங்கள் கழிந்திருக்கும் சூழலில் யுத்த காலத்தில் தமிழ் மக்களுக்கு எதிராக அநீதிகள் இழைக்கப்பட்டிருக்கின்றன என்பதை வெளியுலகின் பார்வைக்குக் கொண்டு செல்வதற்கும் - அதனடிப்படையில் விசாரணை ஒன்றை கோருவதற்குமான தார்மீக நியாயங்கள் இருக்கின்றன. ஆனால், இதனை முன்னெடுக்க வேண்டும் என்றால் ஓர் அடிப்படையான அரசியல் மாற்றம் தமிழ்ச் சூழலில் நிகழவேண்டும். அதாவது, அனைத்து தமிழ் கட்சிகளும் ஒரு புள்ளியில் சந்திக்க வேண்டும். அவ்வாறில்லாது போனால் இதுவும் பத்தோடு பதினொன்றாகவே கடந்து போகும்.

செம்மணியின் பெயரால் முன்னெடுக்கப்பட்ட கவனவீர்ப்பு நடவடிக்கையின்போது நிகழ்ந்த சம்பவங்கள் ஆரோக்கியமான வகையில் இந்த விடயத்தை முன்னெடுத்துச் செல்வதற்கான நம்பிக்கையை தரவில்லை. கவனவீர்ப்பில் பங்குகொள்ள வந்த தமிழ் அரசு கட்சியின் தலைவரை தகாத வார்த்தைகளால் பேசியது தொடக்கம் கவனவீர்ப்பின்போது அரசியல் தீண்டாமை பாராட்டியமை வரையில் தமிழ் கட்சிகள் அனைத்தையும் செம்மணி என்னும் புள்ளியில் சந்திக்க வைப்பதற்கு மாறாக, கட்சிகளை சிதறடித்து - இறுதியில் செம்மணி விவகாரத்தை மடைமாற்றும் கைங்கரியமே இடம்பெற்றது.

முக்கியமாக வடக்கு - கிழக்கில் பெரும்பான்மையான தமிழ் மக்களின் ஆதரவைப் பெற்றிருக்கும் இலங்கை தமிழ் அரசுக் கட்சியை புறக்கணிக்க வேண்டும் என்று நினைப்பதானது மக்களின் நலனில் இருந்து மேலெழும் ஒரு நடவடிக்கை அல்ல. மாறாக, குழப்பங்களை ஏற்படுத்தி குறிப்பிட்ட விடயத்திலிருந்து மக்களை திசைதிருப்புவதும் வெளியாரின் கவனத்தை மழுங்கடிப்பதுமே நோக்கமாகத் தெரிகிறது.

செம்மணி போன்ற விடயங்களில் கட்சி அரசியலை காண்பிக்கக்கூடாது. இதனை ஓர் அரசியல் ஒழுங்காக ஏற்றுக் கொண்டால்தான் தமிழ் கட்சிகள் ஒன்றுபட்டுச் செயல்படுவதற்கான சூழலும் கனியும். ஏனைய விடயங்கள் போன்று இந்த விடயத்திலும் கட்சிகளாகப் பிரிந்து சண்டையிட்டால் மனிதப் புதைகுழி விவகாரம் இலகுவில் புதைந்து போய்விடும்.

தமிழர் அரசியலைப் பொறுத்தவரையில் ஒன்றுபட்டு நின்றால் மட்டுமே வெளியாரின் கவனத்தை ஈர்ப்பதுடன், தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்குக் கடிவாளமிட முடியும். தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், பாராளுமன்றத் தோதலில் கிடைத்த தமிழர் வாக்களிப்பை முன்வைத்து விடயங்களை நகர்த்தலாம் என்று எண்ணுகின்றது - அந்த அடிப்படையில்தான் விடயங்களும் நகர்ந்திருக்கின்றன.

தமிழ் கட்சிகள் பிரிந்து தனித்துவம் பேசுவதால் ஒரு சிறிய நன்மைகூட ஏற்படப் போவதில்லை. மாறாக, தமிழ் மக்களின் நலன்களை வெளியுலகம் முற்றிலுமாக கைகழுவுவதற்கே பயன்படும். "தீதும் நன்றும் பிறர் தர வருவதில்லை" என்பது போல, வடக்கு - கிழக்கில் தமிழ் மக்களின் இருப்பைப் பாதுகாக்க வேண்டுமாயின், தமிழ் கட்சிகள் அனைத்தும் ஒரு புள்ளியில் சந்திப்பதைத் தவிர வேறு வழியில்லை.

## சகோதரத்துவ ரயிலுக்கு வவுனியாவில் வரவேற்பு



வவுனியா, ஜூலை 24

சகோதரத்துவ தினத்தை முன்னிட்டு கொழும்பில் இருந்து வந்த சகோதரத்துவ ரயிலை வவுனியா புகையிரத நிலையத்தில் வைத்து இளைஞர் விவகார, விளையாட்டு துறை பிரதி அமைச்சர் ஏரங்க குணசேகர வரவேற்றார்.

ஜூலை 23 இனக் கலவரத் தினத்தை புதிய அரசாங்கம் "சகோதரத்துவ தினமாக" அறிவித்து கொழும்பில் இருந்து காங்கேசன் துறை வரை "சகோதரத்துவ ரயில்" என்ற பெயரில் சிங்கள, தமிழ், முஸ்லிம் இளைஞர், யுவதிகள் பயணித்தனர்.

கொழும்பில் பயணத்தை தொடங்கிய இந்த ரயிலை இளைஞர், விவகார விளையாட்டுத் துறை அமைச்சர் ஏரங்க குணசேகர, யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இளங்குமரன், வவுனியா மாநகர சபை உறுப்பினர்களான விஜயகுமார், சங்கர், லக்ஷனா ஆகியோரும் வவுனியா இளைஞர் கழக உறுப்பினர்களும் வவுனியாவில் வரவேற்றனர்.

இதைத் தொடர்ந்து, வரவேற்றவர்களும் வவுனியாவை சேர்ந்தவர்களும் யாழ்ப்பாணம் நோக்கி பயணமாகினர். (ஐ-10)

## சீன - இலங்கை உறவுகளை மேம்படுத்த திட்டங்கள் வகுப்பு

### சீனாவின் மாகாண வெளிவிவகார பிரதி பணிப்பாளர்

பீஜிங், ஜூலை 24

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான பல்துறை உறவுகளை நிலையானதாக மேம்படுத்த இரு தரப்புக்கும் இடையில் பல திட்டங்கள் தற்போது வகுக்கப்பட்டுள்ளன. இலங்கையுடனான எரிசக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி வலுத்திட்டங்கள் துரிதகரமாக செயல்படுத்தப்படும். இலங்கையுடனான வரலாற்று சிறப்புமிக்க நட்புறவை பல்துறைகளில் மேம்படுத்துவோம் - என சீனாவின் சின்ங்சியா மாநிலத்தின் வெளிவிவகாரத்துறை பிரதி பணிப்பாளர் நாயகம் ஃபேன் ஹவ்ஃ பெங் தெரிவித்துள்ளார்.

சீன குடியரசின் அழைப்புபின் பேரில் அங்கு சென்றுள்ள இலங்கையின் பல்துறை சார்ந்த தரப்பினரை நேற்று புதன்கிழமை சீனாவின் சின்ங்சியா மாநிலத்தின் உத்தியோக பூர்வ வெளிவிவகாரத்துறை பணிமனையில் அவர் சந்தித்துக் கலந்துரையாடியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். (ஐ)

## வாகன இறக்குமதியை வரையறுக்கவில்லை!

### மத்திய வங்கி ஆளுநர்

கொழும்பு, ஜூலை 24

வாக்ன இறக்குமதியை வரையறுப்பதற்கு அரசாங்கமோ அல்லது மத்திய வங்கியோ எந்த தீர்மானத்தையும் எடுக்கவில்லை என மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கியில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு அவர் இதனை தெரிவித்தார்.

அத்துடன், இலங்கையின் பொருளாதாரம், முதல் காலாண்டில் பதிவானதை போன்று இரண்டாவது காலாண்டிலும் அதே வீதத்தில் வளர்ச்சியடையும், எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த ஆண்டின் முதலாவது காலாண்டில் பொருளாதார வளர்ச்சி விகிதம் 4.8 சதவீதமாக பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.(அ)

## 1.2 கோடி ரூபாய் மதிப்புள்ள போதைப்பொருள் சிக்கியது

### சந்தேகநபர் ஒருவரும் கைது

கொழும்பு, ஜூலை 24


ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாய் பெறுமதியான குஷ் போதைப்பொருளுடன் சந்தேகநபர் ஒருவர் மதுவரித் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு - பத்தரமுல்லை மதுவரி திணைக்கள அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் பேரில் இராஜகிரியவில் நடத்திய சோதனை நடவடிக்கையிலேயே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

கைதானவர் தலவத்து கொடவை சேர்ந்தவராவார். அவரிடமிருந்து 2 கிலோகிராம் குஷ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பத்தரமுல்லை மதுவரித் திணைக்கள அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
துணிச்சலாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்கள் மீது அதிக அக்க றைகாட்டுவார்கள். புது வாகனம் வாங்குவீர்கள். அரசால் ஆதாயம் உண்டு. தைரியம் கூடும் நாள்.

**இடபம்**
இங்கிதமான பேச்சால் எல்லோரையும் கவருவீர் கள். பிள்ளைகளை புதிய பாதையில் வழி நடத்து வார்கள். வராது என்றிருந்த பணம் கைக்கு வரும். உறவினர்களால் ஆதாயம் உண்டு.

**மிதுனம்**
சந்திரன் இருப்பதால் மனஇறுக்கங்கள் உருவாகும். அதிக வேலைச்சுமையால் கோபப் படுவீர் கள். தர்மசங்கடமான சூழ்நிலைகளில் அவ்வப் போது சிக்கிதவிப்பீர்கள். நிதானம் தேவைப்படும் நாள்.

**கடகம்**
சில வேலைகளை அலைந்துதிரிந்து முடிக்க வேண்டி வரும். பிள்ளைகள் பிடிவாதமாக இருப் பார்கள். எவ்வளவுபணம்வந்தாலும்பற்றாக்குறை நீங்கும். வாகனம் பழுதாகும்.

**சிம்மம்**
திட்டமிட்ட காரியங்கள் கைக்கூடும். ஆன்மிக பெரி யோரின் ஆசி கிட்டும். பெற்றோரின் ஆதரவு பெரு கும். உங்களால் வளர்ச்சியடைந்த சிலரை சந் திக்க நேரிடும். நினைத்தது நிறைவேறும் நாள்.

**கன்னி**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். உற வினர் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங் குவார்கள். நெருங்கியவர்களுக்காக மற்றவர்க ளின் உதவியை நாடுவீர்கள்.

**துலாம்**
குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப் படுவீர்கள். பழைய சிக்கலில் ஒன்று தீரும். வியாபாரத்தில் புது தொடர்பு கிடைக்கும்.

**விருட்சிகம்**
சந்திராஷ்டமம் இருப்ப தால் உங்களை அறி யாமலேயே படபடப்பு தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். தன்னம்பிக்கை குறையும். உங்கள் மீது சிலர் வீண்பழி சுமத்துவார்கள்.

**தனுசு**
உற்சாகமாக எதையும் செய்ய தொடங்குவீர்கள். பிள்ளைகள் பொறுப்புணர்ந்து செயல்படுவார்கள். அழகும் இளமையும் கூடும். வாகனப் பழுதை சரி செய்வீர்கள். நன்மை கிட்டும் நாள்.

**மகரம்**
குடும்பத்தில் உள்ளவர்களுக்கு வளைந்து கொடுத்து செல்வீர்கள். பிரபலங்கள் அறிமுகமா வார்கள். அரசால் அனுகூலம் உண்டு. விலகிச் சென்றவர்கள் விரும்பி வருவார்கள்.

**கும்பம்**
குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். நீண்ட நாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். அக்கம்-பக்கம் வீட்டாரின் அன்புத் தொல்லை குறையும். புதுமை படைக்கும் நாள்.

**மீனம்**
தடைகளைக் கண்டு தளராமாட்டீர்கள். தாய்வழி உறவினர்களால் மனஸ்தாபம் வந்து நீங்கும். பழைய கடனைப் பற்றி அவ்வப்போது யோசிப் பீர்கள். உழைப்பால் உயரும் நாள்.

# கிளிநொச்சி முன்பள்ளிகளின் ஆசிரியர்களுக்கு செயலமர்வு

கிளிநொச்சி, ஜூலை 24

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் வடமாகாண அலுவலகத்தின் ஏற்பாட்டில், கிளிநொச்சி மாவட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான சுற்றாடல் தொடர்பான செயலமர்வு நேற்று நடைபெற்றது.

மாவட்ட திறன் விருத்தி நிலையத்தில் செயலமர்வு நடைபெற்றது.

செயலமர்வில் முன்பள்ளி வட மாகாண வலயக் கல்வி அலுவலக உதவிக் கல்விப் பணிப்பாளர் பொ.விஜயநாதன், தெற்கு வலயக் கல்வி அலுவலக உதவிக் கல்விப் பணிப்பாளர் க.யுவராசா, மாவட்ட முன்பிள்ளைப் பருவம் அபிவிருத்தி உத்தியோகத்தர் க.ஜெனிசி வட மாகாண மத்திய சுற்றாடல் அதிகார சபை உதவிப் பணிப்பாளர் ப.துவாரதன், வடமாகாண மத்திய சுற்றாடல் அதிகாரசபை சிரேஸ்ட உத்தியோகத்தர் கு.சிவேந்திரம் மற்றும் முன்பள்ளி ஆசிரியர்கள் கலந்து கொண்டனர். (அ)

## சர்வதேச ரீதியில் சாதித்த மன்னார் சவேரியார் ஆண்கள் பாடசாலை சாதனையாளர் கௌரவிப்பு

மன்னார், ஜூலை 24

சர்வதேச ரீதியில் சாதனை புரிந்த மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை சாதனையாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு அதிபர் அருட்சகோதரர் எஸ்.சந்தியாகு தலைமையில் நேற்று நடைபெற்றது.

காலை மன்னார் பஸ் நிலையத்தில் ஆரம்பமாகிய நிகழ்வில் சாதனையாளர்கள் மாலை அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து சாதனையாளர்கள் பாடசாலை வரை ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

இந்நிகழ்வில் இளையோருக்கான ஒலிம்பிக் போட்டியில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்திய மாணவர்களான ஒ.சமிசன் பர்னாந்து, ஏ.பிரை சன், ரி.டனுமிதன், சி.டடிசன் ஆகியோருடன் ஜூனியர் கெமிஸ்ட்ரி ஒலிம்பியாட் போட்டியில் சர்வதேச ரீதியாக 80 நாடுகளுடன் போட்டியிட்டு மூன்றாம் இடத்தை பெற்றுக் கொண்ட மாணவன் எஸ்.அரோன் டியோறி, தேசிய மட்டத்தில் ஆங்கில போட்டியில் கட்டுரை எழுதுதல் போட்டியில் மூன்றாம் இடத்தை பெற்றுக் கொண்ட ஆறாம் தர மாணவன் வி.திவ்யன் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வில் விருந்தினர்களாக மன்னார் உதவி மாவட்ட செயலாளர் டிலிசன் பயஸ், மன்னார் வலய கல்வி திணைக்கள உடற்கல்வி ஆசிரிய ஆலோசகர் ஜேக்கப், மன்னார் மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் பிறின்ஸ் லெம்பேட், பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் வின்சன், மன்னார் மாவட்ட றோல் போல் சங்கத்தின் தலைவர் பொறியியலாளர் விமலேஸ்வரன், பாடசாலையின் பிரதி அதிபர். சே.அஜித்ருக்சன் டலிமா மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் கலந்து சிறப்பித்தனர்.

# வடக்கு குத்துச்சண்டைப் போட்டியில் வவுனியா ஆண்கள் அணி சம்பியன்

வவுனியா, ஜூலை 24

2025 ஆம் ஆண்டுக்கான வடமாகாண விளையாட்டு போட்டியின் குத்துச் சண்டை போட்டியில் வவுனியா ஆண்கள் அணி சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளது. வடமாகாண குத்து சண்டை போட்டி முல்லைத்தீவு வித்தியானந்தா கல்லூரியில் இடம்பெற்றது.

இதில் வவுனியா மாவட்ட ஆண்கள் அணியினர் 7 தங்கப் பதக்கங்களையும் 2 வெள்ளி பதக்கங்களையும் 3 வெண்கலப் பதகங்களையும் பெற்று வடமாகாணத்தில் முதலாம் இடத்தினை பெற்றுள்ளனர்.

இதேவேளை வவுனியா மாவட்டம் சார்பாக பங்குபற்றிய பெண்கள் அணியினர் 5 தங்கம், ஒரு வெள்ளி, 3 வெண்கலப் பதக்கங்களைப் பெற்று மூன்றாம் இடத்தினை பெற்றுள்ளனர். வவுனியா மாவட்ட குத்துச் சண்டை பயிற்றுவிப்பாளர் நிக்சன் ரூபராஜ் வழி நடத்தலில் களமிறங்கிய இவ்விரு அணிகளும் பெரும் சவால்களுக்கு மத்தியில் போட்டியில் வெற்றி பெற்று வவுனியா மாவட்டத்திற்கு பெருமை சேர்த்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (அ)

# மூளாய் கலவரம் மேலும் மூவர் கைது

யாழ்ப்பாணம், ஜூலை 24

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மூளாய் பகுதியில் இடம்பெற்ற கலவரத்துடன் தொடர்புடையவர்கள் என்ற ரீதியில் மேலும் மூவர் நேற்று முன் தினம் இரவு கைது செய்யப்பட்டனர்.

நேற்று முன்தினம் மூளாய் பகுதி மக்கள் இணைந்து யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் காரியாலயத்துக்கு முன்பாக கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோரை அழைத்து விரைந்து நீதி நடவடிக்கையை முன்னெடுக்குமாறு வலியுறுத்தியிருந்தார்.

அந்தவகையில் மூளாய் - வேரம் பகுதியைச் சேர்ந்த இருவரும், சங்கரத்தை பகுதியைச் சேர்ந்த ஒருவரும் என மூவர், நேற்று முன் தினம் இரவு தொடக்கம் நேற்று அதிகாலை வரையிலான சுற்றிவளைப்பின் போது கைது செய்யப்பட்டனர்.

பொலிஸார் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் இணைந்து இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

மேலும், மூளாய் பகுதியில் தொடர்ந்தும் பொலிஸ் பாதுகாப்பு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற கலவரத்தை அடக்குவதற்கு பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

## கந்தர்மடம் சந்தியில் விபத்து!

யாழ்ப்பாணம், ஜூலை. 24

யாழ். பொலிஸ் பிரிவிற்குட் பட்ட யாழ். பலாலி பிரதான வீதியின் கந்தர்மடம் சந்தியில் நேற்று முன் தினம் இரவு 10 மணியளவில் யாழ். இந்திய துணைத் தூதரகத்துக்கு சொந்தமான வாகனம் ஒன்றும் கார் ஒன்றும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின.

யாழ்.நகர் பகுதியிலிருந்து திருநெல்வேலி பகுதியை நோக்கிச் சென்று கொண்டிருந்த யாழ். இந்திய துணைத் தூதரகத்துக்கு சொந்தமான வாகனம் ஒன்றும் கந்தர்மடம் பகுதியில் இருந்து யாழ்.நகர பகுதிக்கு சென்று கொண்டிருந்த கார் ஒன்றுமே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளன.

இந்த விபத்தில் யாழ்.இந்திய துணைத் தூதரகத்துக்கு சொந்தமான வாகனத்தில் பயணித்த அதிகாரிகளும், காரில் பயணித்த சாரதியும் சிறுகாயங்களுக்குள்ளாகியுள்ளர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசின் வாக்குறுதி அனைத்துமே பொய்!

### சாடுகிறார் உதய கம்மன்பில

கொழும்பு, ஜூலை 24

**தேர்தல் மேடைகளில் அரசாங்கம் கூறிய ஒவ்வொரு வாக்குறுதிகளும் அதீதமான பொய்களாக மாறியுள்ளதாக பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-அரசாங்கம் ஆட்சிக்கு வந்து 10 மாதங்கள் கடந்துள்ளன.

தேர்தலில் சொன்ன வார்த்தைகள் பொய்களாக இருந்தாலும், கொள்கை பிரகடனத்தில் குறிப்பிட்ட விடயங்கள் பொய்களாக மாற முடியாது.

அரசாங்கம் 1329 வாக்குறுதிகளை வழங்கியுள்ளது. அவற்றில் எந்தவொரு வாக்குறுதியும் நிறைவேற்றப்படவில்லை.

அதேநேரம் வரி குறைக்கப்படும் என்ற உறுதிமொழியையும் அரசாங்கம் வழங்கியது.

அத்துடன் வாழ்க்கை செலவு குறைக்கப்பட்டு வருமானம் உயர்த்தப்படும் என உறுதியளித்தது.

எனினும். அரசாங்கம் முட்டை விலையை மாத்திரமே குறைத்துள்ளது முட்டை விலை குறைப்பை மாத்திரம் வைத்துக் கொண்டு அழகான வாழ்க்கையை நடத்திச் செல்ல முடியாது-என்றார். (அ)

## கடன்கள் செலுத்தி முடிந்ததும் எரிபொருளின் விலை குறையும்

கொழும்பு, ஜூலை 24

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அரசாங்கத்துக்கு கடனாக வழங்கவேண்டிய ரூபா 884 மில்லியனை செலுத்துவதற்காக ஒரு லீற்றர் எரிபொருளில் 50 ரூபாவை அறவிட வேண்டியுள்ளதாக, வலுசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி தெரிவித்தார்.

இக்கடனை செலுத்தி முடிவுற்றதும் எரிபொருள் விலையை குறைப்பது தொடர்பில் பரிசீலிக்கப்படும் என்றும் அமைச்சர் தெரிவித்தார். இக்கடனில் சுமார் அரைவாசியை இதுவரை மீள செலுத்தி உள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் எரிபொருள் கொள்வனவில் மோசடிகள் இடம்பெற்றுள்ளனவா என்பது தொடர்பில் விசாரணைகள் நடைபெறுவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினாக்கள் வேளையில், எதிர்க்கட்சியின் தயாசிறி ஜயசேகர எம்.பி. எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தமது கேள்வியில், எரிபொருள் கொள்வனவில் கடந்த காலங்களில் மோசடிகள் இடம்பெற்றுள்ளதாகவும், கொள்வனவின் போது துறை சார்ந்த அமைச்சராக இருந்த கஞ்சன விஜேசகரவின் னைபகளுக்கு பெருமளவு நிதி சென்றுள்ளதாகவும் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பில் வினவினார்.

இந்த கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். (அ)

## பலத்த காற்று குறித்து எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 24

பலத்த காற்று தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை அறிவிப்பை விடுத்துள்ளது.

வடக்கு, வடமத்திய, வடமேல் மற்றும் மத்திய மாகாணங்கள் மற்றும் திருகோணமலை மற்றும் ஹம்பாந்தோட்டை மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டுள்ள இந்த எச்சரிக்கை 24 மணி நேரத்திற்கு அமுலில் இருக்கும் என அந்த திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

நாடு முழுவதும் நிலவும் தென்மேற்கு பருவப் பெயர்ச்சி காரணமாக,

இந்த மாவட் டங்களில் சில நேரங்களில் மணிக்கு 55-60 கி.மீ வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும்.

நாட்டின் ஏனைய பகுதிகளில் சில நேரங்களில் மணிக்கு 40-50 கி.மீ வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (அ)

### புத்தளம் துப்பாக்கிச்சூடு;

## போதைப்பொருள் கடத்தலுடன் தொடர்புடையவரே கொலை!

கொழும்பு, ஜூலை 24

புத்தளம் - மாரவில பகுதியில் நேற்று முன்தினம் இரவு சுட்டுக் கொல்லப்பட்ட பெண் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடுபவர் என்று பொலிஸாரின் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் தனது மகனுடன் முச்சக்கர வண்டியில் பயணித்த பெண்ணை இலக்கு வைத்து துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது. இதில், அந்தப் பெண் உயிரிழந்தார். அவரின் மகன் படுகாயமடைந்தார்.

துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்த பெண்ணின் கணவரும் போதைப்பொருள் கடத்தல் தொடர்பில் சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். பொலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

போதைப்பொருள் கடத்தல் தொடர்பில் ஏற்பட்ட தகராறு காரணமாக இந்த துப்பாக்கிச்சூடு இடம்பெற்றிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரிப்பதற்கு 5 பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. (ஐ)

## இன்ஸ்டாகிராமில் பெற்றோர் மேற்பார்வை செய்யும் வசதிகள் இலங்கையில் அறிமுகம்!

கொழும்பு, ஜூலை 24

13 முதல் 16 வயதுடைய பிள்ளைகளின் ஒன்லைன் செயற்பாடுகளை கண்காணிக்கவும் வழிக்காட்டவும் பெற்றோருக்கு உதவும் வகையில் வடிவமைக்கப்பட்ட இன்ஸ்டாகிராமில் பெற்றோர் மேற்பார்வை செய்யும் வசதி நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இலங்கையில் உத்தியோகபூர்வமாக அறிமுகப் படுத்தப்பட்டுள்ளதாக டிஜிட்டல் பொருளாதார பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன தெரிவித்துள்ளார்.

பிரதி அமைச்சர் எரங்க வீரரத்ன தனது உத்தியோக பூர்வ பேஸ்புக் பக்கத்தில் பகிர்ந்துள்ள அறிக்கையில்-

இளைஞர் பாதுகாப்பு, தரவு பாதுகாப்பு மற்றும் ஒழுங்கு முறை சீராக்கம் போன்ற முக்கியமான விடயங்களில் கவனம் செலுத்தி மெட்டா தொழில்நுட்ப நிறுவனத்துடன் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டது.

இதன் விளைவாக, எமது இளைஞர்களுக்கு பாதுகாப்பான டிஜிட்டல் சூழலை உருவாக்குவதற்கான ஒரு முக்கிய படியாக இன்ஸ்டாகிராம் பெற்றோர் மேற்பார்வை வசதி அறிமுகமாகியுள்ளது.

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் சமூக ஊடக பயன்பாட்டை பொறுப்புடன் மேற்பார்வையிடவும் வழிநடத்தவும் இந்த புதிய விடயம் உதவியாக இருக்கும்.

இலங்கையின் வரவிருக்கும் தரவு பாதுகாப்பு கட்டமைப்பிற்கு மெட்டா நிறுவனம் ஒத்துழைப்பு வழங்குவதாக தெரிவித்துள்ளதோடு, பயனர் பாதுகாப்பு மற்றும் இணக்கத்திற்கான நிறுவனத்தின் உறுதிப்பாட்டை வலுப்படுத்தியுள்ளது.

மெட்டா நிறுவனம் செயற்கை நுண்ணறிவு உள்கட்டமைப்புக்காக உலகளாவிய ரீதியில் 75 பில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்துள்ளது. மெட்டா செயற்கை நுண்ணறிவை தற்போது உலகளவில் 10 இலட்சத்திற்கும் அதிகமானவர்கள் இலவசமாக பயன்படுத்துகின்றனர்.

பாதுகாப்பான மற்றும் டிஜிற்றல் ரீதியாக பொறுப்புள்ள சமூகத்தை மேம்படுத்துவதற்கான அரசாங்கத்தின் பரந்த முயற்சிகளின் ஒரு பகுதியாக, 14 நாடுகளில் பயன்பாட்டிலுள்ள இன்ஸ்டாகிராமின் பெற்றோர் மேற்பார்வை செயலி தற்போது இலங்கையில் உத்தியோகபூர்வமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது-எனகுறிப்பிட்டுள்ளார்

## தூங்கிக்கொண்டிருந்த 13 வயதுச் சிறுமியை வன்புணர முயன்ற கான்ஸ்டபிள் கைதானார்

கொழும்பு, ஜூலை 24

ஒரு வீட்டிற்குள் நுழைந்து தூங்கிக்கொண்டிருந்த 13 வயது சிறுமியை வன்புணர முயன்றதாகக் கூறப்படும் ஒரு பொலிஸ் கான்ஸ்டபிளை கைது செய்துள்ளதாக தெஹிவளை பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம், தெஹிவளை, நெடிமால பகுதியில் இடம்பெற்றுள்ளது. கைது செய்யப்பட்டவர் மேற்கு-தெற்கு போக்குவரத்துப் பிரிவில் இணைக்கப்பட்ட தெஹிவளை பொலிஸ் நிலையத்தில் சிறப்புப் பணியில் ஈடுபட்டுள்ள அதிகாரி ஆவார்.

குடியிருப்பாளர்களால் தாக்கப்பட்ட கான்ஸ்டபிள், சிகிச்சைக்காக களுபோவில போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தெஹிவளை, நெடிமால பகுதியில் உள்ள ஒரு வீட்டிற்குள் நுழைந்த ஒருவர் சிறைப் பிடிக்கப்பட்டதாக வந்த முறைப்பாட்டைத் தொடர்ந்து, இரவு நேர ரோந்து அதிகாரிகள் சம்பவ இடத்திற்குச் சென்று சந்தேக நபரைக் கைது செய்தனர். (அ)

## மீனவரின் சடலம் மீட்பு!

கொழும்பு, ஜூலை 24

புத்தளம் - மதுரங்குளி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தொடுவா கடல் பகுதியில் நேற்று முன் தினம் சடலமொன்று கரையொதுங்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கரையொதுங்கிய சடலம், சிலாபம் பகுதியில் இருந்து கடந்த சனிக்கிழமை கடலுக்குச் சென்று காணாமல் போன இரண்டு மீனவர்களில் ஒருவருடைய என அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் மதுரங்குளி பொலிஸார் குறிப்பிட்டனர்.

37 வயதான நான்கு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சிலாபம் பகுதியில் இருந்து கடந்த சனிக்கிழமை கடலுக்குச் சென்ற மூன்று மீன்பிடி இயந்திர படகுகள் பலத்த காற்று மற்றும் புயலில் சிக்கி காணாமல் போனதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்போது இரண்டு மீன்பிடி இயந்திர படகுகளில் பயணித்த மீனவர்கள் பாதுகாப்பாக நீந்தி கரை சேர்ந்துள்ளனர்.

இந்நிலையில், மற்றுமொரு படகில் பயணித்த 37 மற்றும் 40 வயதுடைய இரண்டு மீனவர்கள் காணாமல் போனதாக தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு காணாமல் போன மீன்பிடி படகு மற்றும் அதில் இருந்த இரண்டு மீனவர்களையும் தேடி சனிக்கிழமை இரவு இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான ஹெலிகொப்டர் மூலம் கடற்பிரதேசங்களில் தேடும் நடவடிக்கைகள் முன்னெடுக் கப்பட்டபோதிலும் எவ்வித தகவல்களும் கிடைக்கவில்லை என கூறப்படுகிறது.

இந்த நிலையில், காணாமற்போனதாக கூறப்படும் மீன்பிடி படகு மாத்திரம் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை சிலாபம் பகுதியில் கரையொதுங்கியுள்ளதாகவும், எனினும் இரண்டு மீனவர்கள் தொடர்பில் எவ்வித தகவலும் கிடைக்கவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நிலையிலேயே, காணாமல் போன இரண்டு மீனவர்களில் ஒருவருடைய சடலம் மதுரங்குளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தொடுவா கடல் பகுதியில் கரையொதுங்கிய நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு மீட்கப்பட்ட குறித்த சடலம் திடீர் மரண விசாரணையின் பின்னர் பிரேத பரிசோதனைக்காக சடலம் புத்தளம் தள வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மதுரங்குளி பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு மூலம் 67,147 மில்லியன் டொலர் வருமானம்!

கொழும்பு, ஜுலை 24

**வெளிநாட்டு வேலைவாய்ப்பு மூலம், கடந்த 10 ஆண்டுகளில், இலங்கைக்கு 67 ஆயிரத்து 147 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கிடைத்துள்ளதாக வெளிவகார மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர தெரிவித்துள்ளார்.**



2015 ஆம் ஆண்டு முதல் 2025ஆம் ஆண்டு மே மாதம் வரையான காலப்பகுதியிலேயே, குறித்த தொகை கிடைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்றத்தில், வாய்மொழி கேள்வி பதிலுக்கான நேரத்தின்போது, இலங்கை மத்திய வங்கியின் பதிவுகளை மேற்கோள் காட்டி பிரதி அமைச்சர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இதனிடையே, 2025 ஆம் ஆண்டு பெப்ரவரி 25ஆம் திகதி நிலவரப்படி, வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கை தொழிலாளர்களின் எண்ணிக்கை சுமார் 13 இலட்சத்து 45 ஆயிரத்து 801 எனவும் வெளிவகார மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர தெரிவித்துள்ளார். (அ)

# அஸ்வெசும ஜுலை கொடுப்பனவு இன்று

கொழும்பு, ஜுலை 24

அஸ்வெசும முதல் கட்ட நிவாரணத்திற்குத் தகுதி பெற்ற பயனாளிகளின், ஜுலை மாதத்துக்கான உதவித்தொகை இன்று பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்படும் என நலன்புரி நன்மைகள் சபை அறிவித்துள்ளது.

இதன்படி, அஸ்வெசும முதல் கட்ட பயனாளிகளில் 1,424,548 பயனாளி குடும்பங்களுக்கு 11,296,461,250 ரூபாய் உதவித் தொகையாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பயனாளிகள் ஜுலை 24 முதல் அவர்களின் வங்கிக் கணக்குகளிலிருந்து உதவித் தொகையைப் பெற்றுக்கொள்ள முடியுமென, நலன்புரி நன்மைகள் சபை அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மாலைதீவுடன் சர்வதேச இராஜதந்திர பயிற்சியில் இணைகின்றது இலங்கை!

கொழும்பு, ஜுலை 24

வெளிநாட்டு சேவை அதிகாரிகளுக்காக நிறுவப்பட்டுள்ள இலங்கையின் பண்டாரநாயக்க சர்வதேச இராஜதந்திர பயிற்சி நிறுவகம் மற்றும் மாலைத்தீவின் வெளிநாட்டு சேவைகள் நிறுவகத்திற்கும் இடையிலான பரஸ்பர ஒத்துழைப்புக்களை மேம் படுத்துதல் மற்றும் புரிந்துணர்வை அதிகரிக்கும் நோக்கில் புரிந்துணர்வு ஒப்பந்த மொன்றை மேற்கொள்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

அமைச்சரவைக் கூட்டத்திலேயே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

அந்தவகையில் கற்கை நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் ஏனைய கற்கை நடவடிக்கைகள் தொடர்பாக தகவல் பரிமாற்றம், கல்வியியலாளர்கள், மாநாடுகளுக்கான வளவாளர்கள் மற்றும் ஆர்வங்காட்டுகின்ற துறைசார் நிபுணர்கள் பரிமாற்றம், இருநாடுகளாலும் வழங்கப்படுகின்ற பயிற்சிகளில் கலந்து கொள்வதற்கு இராஜதந்திர அதிகாரிகளுக்கு வாய்ப்பு வழங்குதல் மற்றும் கொழும்பு மற்றும் மாலே போன்ற நகரங்களில் பாடநெறிகள் மற்றும் மாநாடுகளை ஒழுங்குபடுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

அதற்கமைய, இலங்கையின் பண்டாரநாயக்க சர்வதேச இராஜதந்திர பயிற்சி நிறுவகம் மற்றும் மாலைதீவின் வெளிநாட்டு சேவைகள் நிறுவகத்திற்கும் இடையில் முன்மொழியப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக வெளிவிவகாரம், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வெளிநாட்டு துப்பாக்கியுடன் ஒருவர் கைது!

கொழும்பு, ஜுலை 24

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கியுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கேகாலை பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை அதிகாரிகள் குழுவுக்கு கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைவாக அரநாயக்க பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தெபத்கமவத்த பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

கைதான நபர்-நெலும்தெனிய பகுதியைச் சேர்ந்த 69 வயதுடைய என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சந்தேக நபர், மீட்கப்பட்ட துப்பாக்கியுடன் அரநாயக்க பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

# பாடசாலை மாணவர்களுடன் பயணித்த பேருந்து விபத்து!

கொழும்பு, ஜுலை 24

பெலியத்தை - வீரகெட்டிய வீதியில் ஒகேவெல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பெலிகல பகுதியில் நேற்றுக் காலை 7.30 மணியளவில் பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற பேருந்து ஒன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் சுமார் 16 பாடசாலை மாணவர்கள் காயமடைந்து பெலிகல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

அவர்களில் பலர் இப்போது வைத்தியசாலையில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளதாக வைத்திசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பேருந்து சாலையை விட்டு விலகி வீதியோரத்தில் இருந்த கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியது.

தற்போது, 13 மாணவர்கள் பெலியத்த, பெலிகல, தங்காலை மற்றும் வீரகெட்டிய ஆகிய இடங்களில் உள்ள வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# சிறிலங்கன் எயார்லைன்ஸ் மோசடிகள் குறித்து விசாரிக்க ஜனாதிபதி விசேட விசாரணைக் குழு!

கொழும்பு, ஜுலை 24

சிறிலங்கன் எயார்லைன்ஸ் லிமிடெட் மற்றும் வரையறுக்கப்பட்ட விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனங்களில் நடந்த மோசடி, ஊழல் மற்றும் முறைகேடுகளை விசாரிக்க ஜனாதிபதி விசேட விசாரணைக் குழுவை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க நியமித்துள்ளார்.

மேற்படி ஜனாதிபதி செயலகத்தில் விசேட விசாரணைக் குழுவை ஜனாதிபதி நேற்று முன் தினம் பிற்பகல் சந்தித்து அவர்களுடன் கலந்துரையாடினார்.

அதன்போது சிறிலங்கன் எயார்லைன்ஸ் லிமிடெட் நிறுவனம் மற்றும் வரையறுக்கப்பட்ட விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம் என்பவற்றில் நடந்த முறைகேடுகள் குறித்து முறையான விசாரணை நடைபெறாததால், இந்த நிறுவனங்கள் பாரியளவில் செயலிழந்துவிட்டதாக ஜனாதிபதி அநுர குமார சுட்டிக்காட்டினார்.

இந்த சம்பவங்கள் தொடர்பாக முன்வைக்கப்பட்ட அனைத்து விடயங்களையும் ஆராய்ந்து துரிதமாக விசாரணையை நடத்தவும், எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் நிகழாமல் தடுக்க தேவையான வழிகாட்டுதல்கள் அடங்கிய அறிக்கையொன்றினைச் சமர்ப்பிக்கவும் அவர் குழுவுக்கு அறிவித்தார்.

இந்த விசேட விசாரணைக் குழுவிற்கான நியமனக் கடிதங்களை ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க நேற்று முன் தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் குழுவின் ஒருங்கிணைப்பாளர் மற்றும் உறுப்பினர்களுக்கு வழங்கினார்.

அதன்படி, இந்த ஜனாதிபதி விசேட விசாரணைக் குழுவின் செயலாளர் ஒருங்கிணைப்பாளராக ஜனாதிபதியின் மேலதிகச் செயலாளர் கே.என்.எம். குமாரசிங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

அதன் உறுப்பினர்களாக ஒய்வுபெற்ற கணக்காய்வாளர் நாயகம் எச்.எம். காமினி விஜேசிங்க, ஓய்வுபெற்ற மேலதிகச் சுங்கப் பணிப்பாளர் நாயகம் ஞானசிறி சேனநாயக்க, தேசிய சேமிப்பு வங்கியின் தலைவர் துஷாந்த பஸ்நாயக்க, சட்டத்தரணி தொன் சமிந்த ஜே. அதுகோரல, அரச தொழில் முயற்சிகள் திணைக்கள மேலதிகப் பணிப்பாளர் என்.ஏ.எச். கே. விஜேரத்ன ஆகியோர் பணியாற்றுகின்றனர். (அ)

# ராஜிதவின் பிணை மனு; 30ஆம் திகதி விசாரணைக்கு

கொழும்பு, ஜுலை 24

பிணையில் விடுவிக்க மறுத்து, கொழும்பு நிதிவான் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை சீராய்வு செய்து தன்னை பிணையில் விடுவிக்குமாறு கோரி முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன தாக்கல் செய்த மனுவை எதிர்வரும் 30ஆம் திகதி பரிசீலனைக்கு எடுக்க கொழும்பு மேல் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இந்த மனு நேற்று கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி இந்திரிகா கலிங்கவன்ச முன்னிலையில் அழைக்கப் பட்டிருந்தது.

பிணையை நிராகரித்த நீதிவான் நீதிமன்ற தீர்ப்பின் நகல் மேல் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படாததால், இந்த மனு தொடர்பாக உத்தரவை பிறப்பிக்க முடியாது என்று மேல் நீதிமன்ற நீதிபதி சுட்டிக் காட்டினார்.

இதன்படி, குறித்த பிணை தீர்ப்பின் நகலை சமர்ப்பித்த பின்னர், இது தொடர்பான சமர்ப்பணங்களை முன்வைக்குமாறு ராஜித சேனாரத்ன சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி மைத்திரி குணரத்னவுக்கு மேல் நீதிமன்ற நீதிபதி அறிவித்தார்.

இதைத் தொடர்ந்து மனு மீதான பரிசீலனை 30ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

# வீடு தீப்பிடித்ததில் ஒருவர் உயிரிழப்பு!

கொழும்பு, ஜுலை 24

நாரஹேன்பிட்டி பகுதியில் அமைந்துள்ள ஒரு வீட்டில் நேற்று அதிகாலை தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த தீ விபத்தில் 50 வயதுடைய நபர் ஒருவர் தீக்காயங்களுக்கு உள்ளாகி உயிரிழந்தார்.

பொலிஸாரின் கூற்றுப்படி, சம்பவத்தில் உயிரிழந்தவர் ஒரு வாடகைதாரர் என்றும், தீ விபத்தை அடுத்த பலத்த தீக்காயங்களுடன் அவர் மீட்கப்பட்டு கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார் எனவும் கூறப்பட்டது.

எனினும், பின்னர் அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தாக தெரிவிக்கப்படுகிறது.

தீ விபத்துக்கான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நாரஹேன்பிட்டி பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (அ)

# போதைப்பொருட்களுடன் 458 சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, ஜுலை 24

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் போதைப் பொருட்களுடன் 458 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. பொலிஸ் அதிகாரிகள், இராணுவத்தினர், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர், கடற்படையினர் ஆகியோர் இணைந்து இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது 166 கிராம் ஹெரோயின் போதைப் பொருளும், 728 கிராம் ஐஸ் போதைப்பொருளும், 583 கிராம் கஞ்சா போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டன என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோட்டத் தொழிலாளர்களை அரசாங்கம் கைவிட்டுள்ளது!

## மனோ கணேசன் எம். பி.

கொழும்பு, ஜூலை 24

**வரவு - செலவு திட்டத்தில் ஜனாதிபதி தோட்டத் தொழிலாளர்களுக்கு வாக்குறுதியளித்த ஆயிரத்து 700 ரூபாய் சம்பள அதிகரிப்பு இதுவரை வழங்கப்படவில்லை. அதனால் தோட்டத் தொழிலாளர்களை அரசாங்கம் கைவிட்டுள்ளது என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.**


TPA Leader Mano Ganesan

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், நாட்டின் பிரதான தொழிலாளர்களான தோட்டத் தொழிலாளர்களை அரசாங்கம் கைவிட்டுள்ளது. அவர்களுக்காக கவலைப்பட்டு கதைக்கிறார்களே தவிர அவர்களின் தேவைகளை நிறைவேற்றுவதில்லை. வரவு - செலவு திட்டத்தை சமர்ப்பித்து ஜனாதிபதி உரையாற்றுகையில் தோட்ட தொழிலானர்களுக்கு ஆயிரத்து 700 ரூபாய் வழங்கப்படும் என தெரிவித்தார். ஆனால், அவ்வாறு எதுவும் அதிகரிக்கப்படவில்லை. ஒருசில கம்பனிகள் வழங்குவதாக தெரிவித்தாலும் அது வழங்கப்படவில்லை. நாள் சம்பளமே அவர்களுக்கு வழங்கப்படுவதால், திட்டமிட்டு அந்த மக்கள் ஏமாற்றப்படுகிறார்கள். இதனால் இது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டும்.

சம்பள நிர்ணய சபை தொடர்பில் எங்களுக்கு நம்பிக்கை இல்லை. மக்கள் விடுதலை முன்னணியின் தொழிற்சங்கம் தோட்டத் தொழிலாளர்களுக்கு 2 ஆயிரத்து 200 ரூபாய் வழங்க வேண்டும் என்றே சம்பள நிர்ணய சபையில் தெரிவித்திருந்தது. அது கிடைக்கிறதா, இருந்த அரசாங்கங்களுக்கும் அதனையே தெரிவித்து வந்தீர்கள். தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள அதிகரிப்பு அல்ல. அவர்களை பங்காளிகளாக்க வேண்டும். அதுவே எமது நிலைப்பாடு - என்றார். (ஐ)

# முன்னாள் ஜனாதிபதிகளின் சலுகைகளை நீக்க சட்ட மூலம்

கொழும்பு, ஜூலை 24

முன்னாள் ஜனாதிபதிகளுக்கான சிறப்புரிமைகள், சலுகைகளை இரத்து செய்வதற்கான புதிய சட்டமூலத்தை தயாரிப்பதற்கான யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. அனைத்து ஜனாதிபதிகளுக்கும் பொதுவாகவே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. எவருக்கும் சிறப்புரிமை வழங்கப்படவில்லை என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.


அமைச்சரவை தீர்மானங்களை அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் அறிவித்தபோதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு சட்ட ரீதியாக வழங்கப்பட்டுள்ள அனைத்து சிறப்புரிமைகளும் இரத்து செய்யப்படும். இந்த சட்ட மூலம் வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும். பாராளுமன்ற அனுமதி கிடைத்த பின்னரே சட்டத்தை நடைமுறைப்படுத்தக்கூடிய



காலஅவகாசம் தொடர்பில் குறிப்பிட முடியும். மிகக்குறுகிய காலத்துக்குள் அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

எந்த நபருக்கும் சிறப்புரிமை வழங்கப்பட மாட்டாது. முன்னாள் ஜனாதிபதிகள் அனைவரும் ஒரே மட்டத்திலேயே நடத்தப்படுவர். தற்போது வாழ்ந்து கொண்டிருக்கும் அனைத்து ஜனாதிபதிகளுக்கும் பொதுவாகவே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பு எனும் போது முன்னாள் ஜனாதிபதிகள் மாத்திரமின்றி நாட்டு பிரஜைகளும் கவனத்தில் கொள்ளப்படுவர். அனைவரின் பாதுகாப்பையும் கருத்தில்கொண்டு உரிய நடவடிக்கைககள் முன்னெடுக்கப்படும். இதற்கான அமைச்சரவை அங்கீகாரம் கடந்த 16ஆம் திகதி வழங்கப்பட்டது என்றும் அவர் கூறினார். (ஐ)



# மருந்து விநியோகத்தை முறைப்படுத்த கூட்டம்

## ஜனாதிபதி தலைமையில் நடந்தது

கொழும்பு, ஜூலை 24

மருந்து விநியோக செயல்முறையை முறைப்படுத்துவது தொடர்பாக ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க, சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ, பிரதி அமைச்சர் ஹன்சக விஜயமுனி மற்றும் சுகாதார அமைச்சு அதிகாரிகள் இடையே நேற்றுமுன்தினம் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

நேற்றுமுன்தினம் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில், மருந்துகளின் கொள்முதல், விநியோகம் குறித்து இதன்போது கலந்துரையாடப்பட்டது. அத்துடன், அந்த பொறிமுறையை சரிப்படுத்தி பற்றாக்குறை மற்றும் தாமதங்கள் இல்லாமல் மக்களுக்கு மருந்துகளை தொடர்ச்சியாக வழங்குவதை உறுதி செய்யவும் நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

மருந்து கொள்முதல் செயல்முறை மற்றும் விநியோக பொறிமுறையில் ஏற்பட்டுள்ள சிக்கல் நிலைமைகள் மற்றும் பலவீனங்கள் குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

சில மருத்துவமனைகளில் மருந்து பற்றாக்குறை ஏற்படுவதைத் தவிர்க்க உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். நாட்டில் மீண்டும் இது போன்ற நிலைமை ஏற்படாமலிருக்க நடவடிக்கை எடுக்குமாறும் அதற்குத் தேவையான நீண்டகால திட்டங்களை உடனடியாக தயாரிக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

மருத்துவமனைகளுக்கு மருந்துகளை பெறுவதற்கு தேவையான நிதி ஏற்கனவே திறைசேரியிலிருந்து ஒதுக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த நாட்டு மக்களுக்கு உயர்தர சுகாதார சேவைகளை உறுதி செய்வதில் அனைவரும் அர்ப்பணிப்புடன் இருக்க வேண்டியது அவசியம் என்றும் ஜனாதிபதி இதன்போது சுட்டிக்காட்டினார். (ஐ)

# மின்சார சபை மறுசீரமைப்பு சட்டத்தை எதிர்த்து போராட்டம்

கொழும்பு, ஜூலை 24

இலங்கை மின்சார சபை மறுசீரமைப்பு திருத்த சட்ட மூலத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நாடளாவிய ரீதியில் மின்சார சபை தொழிற்சங்கங்கள் சுகயீன விடுமுறை தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுத்திருந்தன. இதனால் மின்சார சபை பணிமனைகளில் சேவையை பெற முடியாது பெருமளவு மக்கள் சிரமங்களை எதிர்கொண்டனர்.

உத்தேசிக்கப்பட்டுள்ள மின்சார சபை மறுசீரமைப்பு திருத்தச் சட்டத்தை மீள பெறுமாறு வலியுறுத்தியும் தமது தொழில் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கோரியும் மின்சார சபையின் 28 தொழிற்சங்கங்களை சேர்ந்த ஊழியர்கள் நேற்றுமுன்தினம் இலங்கை மின்சார சபையின் தலைமை பணிமனைக்கு முன்பாக நேற்றுமுன்தினம் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



இலங்கை மின்சார சபை மறுசீரமைப்பு திருத்தச் சட்டமூலம் தொடர்பான பாராளுமன்ற விவாதம் இன்று நடைபெறவுள்ளது. இந்நிலையில் மின்சார சபையின் 28 தொழிற்சங்கங்களை சேர்ந்த சுமார் 22 ஆயிரத்துக்கும் அதிகமான ஊழியர்கள் தொழிற்சங்க போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் கீழ் உள்ள மின் சக்தி துறையில் மறுசீரமைப்பைக் கொண்டுவரும் நோக்கில் கொண்டுவரப்பட்ட 2024 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க இலங்கை மின்சார சபை மறுசீரமைப்பு சட்ட மூலத்தை திருத்தங்களுடன் மீள நிறைவேற்றுவதற்கு தற்போதைய அரசாங்கம் தயாராகி வருவதாக மின்சார சபை தொழிற்சங்கங்கள் சுட்டிக்காட்டுகின்றன. இதனால் மின்சார சபை ஊழியர்களின் தொழிலுக்கு ஆபத்து ஏற்படுவதுடன், தமக்கான சலுகைகள் கொடுப்பணவுகள் தொடர்பிலும் பிரச்னைகள் எழும் என்றும் அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

மின்சார சபையினரின் போராட்டத்தையடுத்து இலங்கை மின்சார சபை தலைமை பணிமனை முன்பாக பெருமளவு பொலிஸார், இராணுவத்தினர் குவிக்கப்பட்டிருந்தனர். (ஐ)

# ஏ. ஐ. விருத்திக்கு சிங்கப்பூரின் ஒத்துழைப்பை பெற தீர்மானம்

கொழும்பு, ஜூலை 24

செயற்கை நுண்ணறிவு (ஏ. ஐ.) அபிவிருத்திக்கு சிங்கப்பூரின் செயற்கை நுண்ணறிவு தொடர்பான வேலைத்திட்டத்தின் ஒத்துழைப்புகளைப் பெற அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

செயற்கை நுண்ணறிவுக்கான இலங்கை மூலோபாய கொள்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் பங்காண்மை மற்றும் அறிவு பரிமாற்றத்திற்கான வாய்ப்புக்களைத் தேடிக் கண்டறிவதற்காக சிங்கப்பூரின் தேசிய பல்கலைக்கழகத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் "சிங்கப்பூர் செயற்கை நுண்ணறிவு தொடர்பான வேலைத்திட்டம்" உடன் கலந்துரையாடல் நடத்தப்பட்டுள்ளது.

அதற்காக இரு நாடுகளுக்கு இடையிலான ஒத்துழைப்புகளை முறைமைப்படுத்துவதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கு முன்மொழிவொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் உள்நாட்டிலும் உலகளாவிய ரீதியிலும் எதிர்கொள்கின்ற சவால்களுக்கு முகங்கொடுக்கும் வகையில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பங்களை அபிவிருத்தி செய்வதற்கான ஒருங்கிணைந்த ஆய்வுகளை ஆரம்பித்தல், செயற்கை நுண்ணறிவு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல் மற்றும் பரஸ்பர ஒத்துழைப்புகளை உருவாக்கிக் கொள்வதே நோக்கமாக உள்ளது.

அதற்கமைய, இலங்கை டிஜிற்றல் பொருளாதார அமைச்சு மற்றும் சிங்கப்பூரின் தேசிய பல்கலைக்கழகத்துக்கும் இடையில் முன்மொழியப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக டிஜிற்றல் பொருளாதார அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ஐ)

# புத்தளத்தில் துப்பாக்கிச்சூடு; பெண் பலி சிறுவன் காயம்!

சிலாபம், ஜூலை 24

அடையாளம் தெரியாதவர்கள் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் பெண் ஒருவர் உயிரிழந்தார். சிறுவன் ஒருவர் காயமடைந்தார்.

புத்தளம் - மாரவில பகுதியில் நேற்று முன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இந்தத் துப்பாக்கிச்சூட்டு சம்பவத்தில் 30 வயது பெண்ணே உயிரிழந்தார். இதன்போது [illegible] வயது சிறுவன் ஒருவரும் [illegible]மடைந்தார் என்று புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர். அத்துடன், மேலதிக விசாரணைகளையும் அவர்கள் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாறையில் இனப்படுகொலை; வீரமுனையில் மனித புதைகுழி!

## தமிழ் அரசு எம். பி. கவீந்திரன்

கொழும்பு, ஜுலை 24

**அம்பாறை மாவட்டத்தில் தமிழர்களின் பூர்வீக இடங்களை அடியோடு அழிக்கும் நோக்கோடு படையினருடன் இணைந்து முஸ்லிம் ஊர்காவல்படையான ஜிகாத் அமைப்பு தமிழ் மக்களை இனப்படுகொலை செய்தது. அம்பாறை மாவட்டத்திலுள்ள வீரமுனையில் நிலத்தை தோண்டினால் மனித எச்சங்கள் கூடுதலாக வரும் என தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்தார்.**

நேற்று முன்தினம் பாராளுமன்றில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

செம்மணி தமிழின படுகொலை நடந்த விடயங்களை இந்த அரசு ஆராய்கின்றது. அரியாலை சித்துப்பாத்தி மனிதப் புதைகுழி தொடர்ந்தும் தோண்டப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த மனிதப் புதைகுழியில் குழந்தைகள் கூட படுகொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டுள்ளார்கள். தாயின் வயிற்றில் வைத்து தமிழரின் கருவைக்கூட அறுத்துள்ளார்கள். தமிழினப் படுகொலை நடந்ததற்கான ஒரு சாட்சியாக இது காணப்படுகிறது.

தமிழினப் படுகொலை ஆய்வானது சர்வதேச நியமத்தின் அடிப்படையில் சர்வதேச தேசநாடுகளின், சர்வதேச நீதிமன்றங்களின் ஒத்துழைப்புடன் நடைபெற வேண்டும். ஏனெனில், கடந்தகால அரசுகள் உள்நாட்டு பொறிமுறைமூலம் இந்த விடயங்களை செய்து பொய்யான அறிக்கைகளைத்தான் வெளியிட்டன. எனவே, எமது மக்கள் இவ்வாறான விசாரணைகளில் நம்பிக்கை இழந்துள்ளனர்.

செம்மணி படுகொலை மட்டுமல்லாது தமிழினப் படுகொலையானது வடக்கு, கிழக்கு முழுவதும் நடைபெற்றுள்ளது. அம்பாறை மாவட்டத்திலுள்ள வீரமுனை படுகொலை, திராய்க்கேணி படுகொலை, உடும்பு முலை படுகொலை, மத்தியமுகாம் படுகொலை, சத்துருக்கொண்டான் படுகொலை, கிழக்கு பல்கலைக்கழக படுகொலை, திருகோணமலை மாவட்டத்தில் நடந்த அதிகளவான படுகொலைகள் தமிழின படுகொலைகளாக நடந்துள்ளன.

அம்பாறை மாவட்டத்தில் நடந்த படுகொலையானது படையினருடன் முஸ்லிம் ஊர்காவல் படையான ஜிகாத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் சேர்ந்தே மேற்கொண்டனர். தமிழர்களின் பூர்வீகமான இடங்களை இல்லாமல் செய்து அங்கு வாழ்ந்த தமிழ் மக்களை சிறுவர், பெரியோர், குழந்தைகள் என்று பாராது வயிற்றில் இருந்த குழந்தையைக்கூட வெட்டிக்கொன்றனர். தனிப்பட்ட ரீதியில் தமிழினத்தை அழிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் செய்யப்பட்ட படுகொலைகள்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள வீரமுனையில் நிலத்தை தோண்டினால் மனித எச்சங்கள் கூடுதலாக வரும். இதே போன்று திராய்க்கேணியிலும் மனித எச்சங்கள் இருக்கின்றன. திருக்கோவில் பகுதியில் இருக்கின்றன - மட்டக்களப்பில் இருக்கின்றன. வடக்கு, கிழக்கில் எங்கு நிலத்தை தோண்டினாலும் தமிழினம் அழிக்கப்பட்டதற்கான சாட்சிகளும் ஆவணங்களும் உள்ளன.

தமிழினம் அழிக்கப்பட வேண்டும் என்பதற்காகவே இந்தப் படுகொலைகள் நடந்தன. எனவே இதற்கான நீதி விசாரணைகள் சர்வதேச ரீதியாக நடைபெற வேண்டும். நாம் இந்த நாட்டிடம் நீதி கேட்கவில்லை. சர்வதேசத்திடமே எமக்கான நீதியை கோருகின்றோம் - என்றார். (ஐ)

# களுவாஞ்சிக்குடி அரச ஒசுசல மூடப்பட்ட நிலையிலுள்ளது!

## சாணக்கியன் பாராளுமன்றில் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜுலை 24

களுவாஞ்சிக்குடி மருத்துவமனையில் அரச ஒசுசல மருந்தக கட்டடம் அமைக்கப்பட்டு மூடிய நிலையிலேயே இருக்கிறது என்று பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவிடம் கேள்வி எழுப்பிய அவர், "மட்டக்களப்பு மாவட்டத்தில் மூன்று அரச ஒசுசல மருந்தகங்கள் வேண்டும் என எம்மால் கோரிக்கை விடுக்கப்பட்டது. அதேவேளை, களுவாஞ்சிக்குடி மருத்துவமனையில் அரச ஒசுசல மருந்தக கட்டடம் அமைக்கப்பட்டு மூடிய நிலையில் உள்ளது. எனவே, மட்டக்களப்பில் அரச ஒசுசல மருந்தக மருந்தகங்கள் அமைக்கப்படுமாயின் இந்த களுவாஞ்சிக்குடி மருத்துவமனையிலுள்ள வளாகத்தில் உள்ள கட்டிடத்தையும் கவனத்தில் கொள்ள முடியுமா" என்று கேட்டார்.

அவருக்கு பதிலளித்த சுகாதார அமைச்சர், "மாவட்ட மருத்துவமனைகள் மத்திய அரசாங்கத்துக்கு கீழ் செயல்படுமாக இருந்தால், அந்த மருத்துவமனைகளுக்கான உதவிகளை முறையாகவும் உயர்ந்த மட்டத்திலும் மேற்கொண்டு செல்ல முடியும். அந்த நடவடிக்கைகளை மாகாண சபைகளின் இணக்கப்பாட்டுடனேயே மேற்கொள்ள முடியும்", என்று கூறினார். (ஐ)

# குரங்குகள் கடித்ததில் 6 பெண்கள் காயம்!

மட்டக்களப்பு, ஜுலை 24

வந்தாறுமூலையில் குடிமனைகளுக்குள் நுழைந்த குரங்குகள் பெண்களை கடித்ததில் கடந்த ஒரு வாரத்தில் 6 பேர் காயமடைந்தனர்.

இதனிடையே, குரங்குகளின் செயல்களால் வீடுகளின் கூரைகள் சேதமடைவதுடன், பயிர்கள் அழிவடைகின்றன. மக்களும் அச்சமடைகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, இந்தப் பகுதியில் குரங்குகளை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)

# காதலியை கொன்றுவிட்டு காதலனும் உயிர்மாய்ப்பு!

அக்கரைப்பற்று, ஜுலை 24

இளம் பெண் ஒருவரை கழுத்தறுத்து கொன்றுவிட்டு, இளைஞர் ஒருவர் தானும் தற்கொலை செய்துகொண்ட சம்பவம் அம்பாறை, பதியதலாவ, மரங்கல பகுதியில் இடம்பெற்றுள்ளது.

நேற்றுமுன்தினம், மோட்டார் சைக்கிளில் அவரின் காதலி என்று கூறப்படும் இளம் பெண்ணின் வீட்டுக்கு சென்ற இளைஞர், இளம்பெண்ணை கழுத்தறுத்து கொன்றார். அத்துடன், அந்தப் பெண்ணின் தந்தை, தாய்க்கும் வெட்டுக் காயங்களை ஏற்படுத்தினார். இதன் பின்னர், தானும் கழுத்தறுத்து உயிரை மாய்த்துக் கொண்டார்.

இந்த சம்பவத்தில் 22 வயது பெண்ணே உயிரிழந்தார். அவரின் தாய், தந்தை மஹா ஓயா ஆதார மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தக் கொலையை செய்துவிட்டு தற்கொலை செய்தவர் 31 வயதான மொனராகலையை சேர்ந்த நபராவார். (ஐ)

# உணவு ஒவ்வாமை காரணமாக 19 பேர் வைத்தியசாலையில்!

திருமலை, ஜுலை 24

கிண்ணியாவில் உணவு ஒவ்வாமை காரணமாக 19 பேர் கிண்ணியா தள வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் பகல் இடம் பெற்றுள்ளது. கிண்ணியாவில் உள்ள ஹோட்டல் ஒன்றில் உணவு அருந்தியவர்களுக்கு இந்நிலை ஏற்பட்டுள்ளது.

திருகோணமலை-மட்டக்களப்பு பிரதான வீதியில் அமைந்துள்ள கிண்ணியா ஹோட்டலில் உணவு உண்டவர்களுக்கு உணவு ஒவ்வாமை காரணமாக சுகவீனமுற்ற நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதில் சுட்ட கோழி (ghu;gpf;A+) இறைச்சி உணவு சாப்பிட்ட 10 பெண்கள், 06 ஆண்கள், 03 சிறுவர்கள் உட் பட 19 நபர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்கள் கிண்ணியா தள வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டனர். இதேவேளை மூதூர் வைத்திய சாலையில் மூவரும், நிலாவெளியில் இருவரும் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த உணவை சாப்பிட்டவர்களுக்கு கடந்த செவ்வாய்க்கிழமை அதிகாலை 4 மணியிலிருந்து வயிற்றோட்டம், வாந்தி, அதிக உஷ்ணத்துடனான காய்ச்சல் போன்ற அறிகுறிகள் ஏற்படவே அவதியுற்ற நிலையில் அவர்கள் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஐ)

# திருகோணமலை சுமேதங்கபுரத்தில் யானை தாக்கி ஒருவர் உயிரிழப்பு

திருமலை, ஜுலை 24

திருகோணமலை - சேருநுவர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுமேதங்கபுர பகுதியில் யானை தாக்கியதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மற்றுமொருவர் படுகாயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இச்சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் மூதூர் - மல்லிகைத்தீவச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான தம்பிராசா வர்ணகுரநெட்ணம் என்பவரே உயிரிழந்துள்ளதுடன், தோப்பூர் -நாராயணபுரத்தைச் சேர்ந்த யோகராசா என்பவர் படுகாயமடைந்துள்ளார்.

சேருநுவர பொலிஸ் பிரிவில் உள்ள மாங்குளம் பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்டுவிட்டு தங்களுடைய இருப்பிடங்களுக்கு திரும்புகையிலேயே இவர்களை யானை தாக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்தவரின் சடலம் சேருவில வைத்தியசா லையில் வைக்கப்பட்டு மூதூர் நீதிமன்ற நீதிபதி திருமதி தஸ்னீம் பௌசான்காலை சடலத்தை பார்வையிட்டதுடன் உடற் கூற்று பரிசோதனைக்காக சட லம் திருகோணமலை வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. சம்பவத்தில் படுகாயமடைந்தவர் மேலதிக சிகிச்சைகளுக்காக மூதூர் வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ)

வவுணதீவு பொலிஸார் கொலை:

# உண்மையை மறைத்த பொலிஸ் அதிகாரி கைது

மட்டக்களப்பு, ஜுலை 24

வவுணதீவு வலையிறவு பாலத்துக்கு அருகாமையில் இரு பொலிஸாரை துப்பாக்கியால் சுட்டும் வெட்டியும் கொலை செய்த சம்பவதில் பிழையான தகவலை வழங்கிய குற்றச்சாட்டில் பொலிஸ் அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் நடந்தபோது மட்டக்களப்பு மாவட்ட புலனாய்வு பிரிவு பொறுப்பதிகாரியாகவும் தற்போது கந்தளாய் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிவருபவருமான பொலிஸ் பரிசோதகர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸார் படுகொலையின் உண்மை விடயம் மூடிமறைக்கப்பட்டு விடுதலை புலிகளின் முன்னாள் போராளிமீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது. இதனை கண்டறிந்த நிலையிலேயே பொலிஸார் கடந்த திங்கட்கிழமை சந்தேக நபரை கைது செய்தனர். (ஐ)

# இளைஞர்கள், யுவதிகளுக்கான கல்வி ஊக்குவிப்பு செயலமர்வு

மட்டக்களப்பு, ஜுலை 24

அக்ரைப்பற்று அமான் சிறிலங்கா ஏற்பாட்டில் இளைஞர் யுவதிகளுக்கான கல்வி ஊக்குவிப்பு செயலமர்வு ஆலிம் நகர் அஸ்ஸி பாயா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

முன்னாள் வலயக் கல்வி பணிப்பாளர் யூ.எல். எம்.ஹாசிம் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் பல்வேறு தலைப்புகளில் துறைசார்ந்த வளவாளர்களைக் கொண்டு இச்செயலமர்வு நடைபெற்றன.

கல்வியின் முக்கியத்துவம், இளைஞர்கள் ஒழுக்கமிக்க சமுதாயத்தை கட்டியெழுப்பும் முன்னோடிகள், இளைஞர்கள் அறிய வேண்டிய சட்ட விடயங்கள், இன்றைய இளைஞர்கள் எதிர்நோக்கும் மருத்துவப் பிரச்சினைகள், இளைஞர்கள் கடைப்பிடிக்க வேண்டிய சுகாதார பழக்கவழக்கங்கள் போன்ற தலைப்புகளில் வளவாளர்களாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ. எஸ்.பௌஸ், சட்ட வைத்திய அதிகாரி எஸ். நிபாஸ்டீன், சிரேஷ்ட சட்டத்தரணி கே சமீம், வைத்தியர்களான ஜெஸ்மினா நிபால், எம். எம். மிஸ்பா, எஸ். சித்தி சாமிலா, எம். எஸ். முஹம்மட் பஸீல் ஆகியோர் கலந்து கொண்டனர். (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பட்டினி நெருக்கடி நிலைமை காஸாவில் உச்சமடைகின்றது

*** 12 குழந்தைகள் உட்பட 33 பேர் மரணம்**
*** உதவி மையங்கள்மீது தாக்குதல் உச்சம்**



ஊட்டச்சத்து குறைபாட்டால் உயிரிழந்த தனது குழந்தைக்கு கண்ணீருடன் இறுதி விடை கொடுக்கும் தாயார்...!

நியூயோர்க், ஜூலை 24

**"காஸாவின் பசி நெருக்கடி விரக்தியின் புதிய நிலைகளை எட்டியுள்ளது" என்று ஐ. நா. உலக உணவுத் திட்டம் எச்சரித்துள்ளது.**

இதனிடையே, இரு நாட்களில் 12 குழந்தைகள் உட்பட 33 பேர் ஊட்டச்சத்து குறைபாட்டால் உயிரிழந்தனர் என்று காஸாவின் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதனை உறுதி செய்யும் விதமாக "மனிதாபிமான உதவிகள் இல்லாதததால் மக்கள் இறக்கின்றனர். ஊட்டச்சத்து குறைபாடு அதிகரித்து வருகிறது. 90 ஆயிரம் சிறார்கள், பெண்களுக்கு அவசர சிகிச்சைகள் தேவைப்படுகின்றன", என்று ஐ. நா. உலக உணவுத் திட்டம் கூறியுள்ளது.

இதனிடையே, காஸாவில் அதிகரித்து வரும் மோசமான மனிதாபிமான நிலைமைகளால் தான் திகைத்துப் போயுள்ளார் என்றும் மக்களை உயிருடன் வைத்திருப்பதற்கான கடைசி உயிர்நாடிகள் சரிந்து வருகின்றன எனவும் ஐ. நா. பொதுச் செயலாளர் அன்ரனியோ குட்டெரஸின் செய்தித் தொடர்பாளர் கூறியுள்ளார். ஐ. நா.வால் வழங்கப்படும் மனிதாபிமான நிவாரணத்தை அனைத்து வழிகளிலும் அனுமதிக்கவும் வசதி செய்யவும் இஸ்ரேல் கடமைப்பட்டுள்ளது என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இஸ்ரேல் உதவி விநியோக திட்டத்தை ஆரம்பித்த மே 27ஆம் திகதி முதல், அந்த மையங்களில் உணவுக்காக காத்திருக்கும் பலஸ்தீன மக்கள் கொல்லப்பட்டுகின்றனர். கிட்டத்தட்ட தினசரி இந்த கொலைகள் நடத்தப்படுகின்றன. இதுவரை ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர் என்று ஐ. நா. மனித உரிமைகள் பேரவை தெரிவித்துள்ளது.

மனித உரிமைகள் பேரவையின் இந்தக் குற்றச்சாட்டுக்கு "உதவிகளை ஹமாஸ் அமைப்பினர் திருடுவதைத் தடுப்பதற்கு இந்த விநியோகத் திட்டம் அவசியம்", என்று இஸ்ரேல் கூறுகிறது.

இதனிடையே, "மருத்துமவனைகளில் நோயாளர்கள், ஊழியர்களுக்கு இனி உணவு வழங்க முடியாது. அவர்களில் பலர் கடுமையான பசியால் உடல் ரீதியாக தொடர்ந்து இயங்க முடியாது உள்ளனர்", என்று டெய்ர் அல்-பலாவில் உள்ள அல்ல அக்ஸா மருத்துவமனையின் செய்தி தொடர்பாளர் மருத்துவர் கலீல் அல் - தக்ரான் பி.பி.ஸி. செய்தி நிறுவனத்துக்கு தெரிவித்துள்ளார்.

பசியால் வாடும் குழந்தைகளுக்கு போத்தல் பாலைக்கூட வழங்க முடியாத நிலை காணப்படுகிறது. பால்பொருட்கள் தீர்ந்து விட்டன. உணவு பற்றாக்குறையால் சந்தைகள் மூடப்பட்டுள்ளன என்றும் கூறப்படுகிறது.

"என் குழந்தைகள் இரவு முழுவதும் பசியால் அழுகிறார்கள். கடந்த மூன்று நாட்களாக சிறிய பருப்பு தட்டையே சாப்பிட்டார்கள். ரொட்டி இல்லை. ஒரு வாரத்துக்கு முன்பு ஒரு கிலோ மாவு 80 டொலராக (நம் நாட்டு மதிப்பில் சுமார் 24 ஆயிரம் ரூபாய்) இருந்தது என்று முடி திருத்துபவரான இரு குழந்தைகளின் தந்தையான முகமது எமாத் அல் தின் பி. பி. ஸி. செய்திக்கு அளித்த நேர்காணலில் குறிப்பிட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# யுனெஸ்கோ அமைப்பிலிருந்து வெளியேறியது அமெரிக்கா

வாஷிங்டன், ஜூலை 24

யுனெஸ்கோ அமைப்பிலிருந்து அமெரிக்கா வெளியேறியுள்ளது. இதனை அந்த நாட்டின் அரச துறை செய்தித் தொடர்பாளர் ரொம்மி ப்ரூஸ் உறுதிப்படுத்தியுள்ளார்.

ஐ. நா. கல்வி, அறிவியல் பண்பாட்டு நிறுவனமான யுனெஸ்கோ இஸ்ரேலுக்கு எதிரான நிலைப்பாட்டோடு தொடர்ந்து செயல்படுவதே இந்த விலகலுக்குக் காரணம் என்று கூறப்படுகிறது.

இதற்கு முன்னர் 1984இல் யுனெஸ்கோ அமைப்பு ரஷ்யாவுக்கு சாதகமாக உள்ளது எனக் கூறி அமெரிக்கா வெளியேறியது. அப்போது ரொனால்ட் ரீகன் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தார். பின்னர் 2002இல் மீண்டும் யுனெஸ்கோவில் இணைந்தது. தொடர்ந்து கடந்த 2017ஆம் ஆண்டு யுனெஸ்கோவில் இருந்து அமெரிக்கா விலகியது. இந்த நிலையில், கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே யுனெஸ்கோவில் இணைந்தது. இந்த நிலையில் இப்போது மீண்டும் வெளியேறியுள்ளது. (ஐ)

# 100 வரையான பெண்கள் கொன்று புதைக்கப்பட்டனர்

பெங்களூரு, ஜூலை 24

இந்தியாவின் கர்நாடக மாநிலத்தில் பிரபல ஆலயமான தர்மஸ்தலா மஞ்சுநாதர் ஆலயத்துக்கு சென்ற பெண்கள் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு கொன்று புதைக்கப்பட்டனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து இந்த சம்பவம் தொடர்பில் விசாரிக்க சிறப்பு விசாரணை குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

பிரபலமான ஆலயத்துக்கு தினமும் ஏராளமான பக்தர்கள் வரும் நிலையில் இந்த அதிர்ச்சி தகவலை ஆலய நிர்வாகத்தின் கீழ் பணியாற்றிய ஊழியர் ஒருவர் ஆதாரங்களுடன் கர்நாடக மாநில அரசுக்கு கடிதம் மூலம் அளித்த முறைப்பாட்டால் தெரிய வந்துள்ளது.

1998 - 2014 ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் சுமார் 100இற்கும் அதிகமான பெண்கள் கொடூரமாக தாக்கப்பட்டு வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டு ஆலயத்துக்கு சொந்தமான நிலத்தில் புதைக்கப்பட்டனர். இதற்கும் ஆலய நிர்வாகத்துக்கும் தொடர்பு உள்ளது - என்று அந்தக் கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் கர்நாடகாவிலும் இந்தியாவிலும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதையடுத்து, இந்த சம்பவம் குறித்து விசாரிக்க சிறப்பு விசாரணை குழு ஒன்றை கர்நாடக அரசு அமைத்துள்ளது.

(ஐ)

# சுவைடா மருத்துவமனையில் 300 பேர் வரை சுட்டுக்கொலை

*சிரிய அரச படைகள்மீது குற்றச்சாட்டு*

டமஸ்கஸ், ஜூலை 24

சிரியாவின் - சுவைடா நகரத்தில் ஒரு வாரத்துக்கு முன்னர் ஏற்பட்ட மத மோதல்களில் அரச படைகள் மருத்துவமனையில் படுகொலைகளை செய்தன என்று குற்றச்சாட்டு எழுந்துள்ளது.


மருத்துவமனையின் நோயாளர் விடுதிகளுக்குள் நுழைந்த படையினர் 8 வயது சிறுவன் உட்பட படுக்கையிலிருந்த நோயாளர்கள் வரை சுமார் 300 பேர் வரை சுட்டுக் கொன்றனர் என்று சுவைடா மருத்துவமனையின் மருத்துவர்கள், தாதியர்கள் கூறினர்.

கடந்த புதன்கிழமை இந்தக் கொலைகளை அரச படைகள் முன்னெடுத்தன. ட்ரூஸ் சிறுபான்மை இனத்தவர்களை குறிவைத்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதன்போது, கருத்து வெளியிட்ட மருத்துவமனை தன்னார்வ பணியாளர் ஒருவர், "படையினர் 8 வயது சிறுவனை தலையில் சுட்டுக் கொன்றனர். அவர்கள் அரக்கர்கள் போல நடந்தார்கள். அவர்கள் செய்த குற்றம் என்ன? ஒரு ஜனநாயக நாட்டில் சிறுபான்மையினராக இருப்பதைத் தவிர", என்றார்.

இந்தத் தாக்குதல் குறித்து தெளிவான விளக்கம் எதுவும் கிடைக்காதபோதிலும் சுமார் 300 பேர் வரையானோர் சுவைடா மருத்துவமனையில் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று கூறப்படுகிறது.

சிரியாவின் சுவைடா நகரில் ட்ரூஸ் இனத்தவர்கள் அதிகம் வாழ்கின்றனர். 70 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் வாழும் அந்த நகரம் முழுமையாக ட்ரூஸ் கட்டுப்பாட்டிலிருந்தது. கடந்த செவ்வாய்க்கிழமை சிரிய அரச படைகள் அந்த நகரத்தை கைப்பற்றியிருந்தன என்பது குறிப்பிடத்தக்குது.

(ஐ)



**யார் இந்த ட்ரூஸ்கள்?**

சிரியா, லெபனான், இஸ்ரேலில் அரபு மொழி பேசும் ஷியா இஸ்லாத்தின் கிளை பிரிவினரே ட்ரூஸ் மக்கள். சுமார் 10 இலட்சம் ட்ரூஸ்கள் இந்த நாடுகளில் வாழ்கின்றனர். இதில் அரைவாசி பேர் சிரியாவில் வாழ்கின்றனர்.

ட்ரூஸ் இனத்தவர்கள் சிரிய அரசியல் ஒழுங்கில் நிலையில்லாத நிலை வகித்துள்ளனர். அசாத்தின் ஆட்சியின் கீழ் இவர்கள் வரையறுக்கப்பட்ட சுயாட்சியை கொண்டிருந்தனர். இதனிடையே, இஸ்ரேல் தனது மூலோபாய கூட்டணியை உருவாக்கும் முயற்சியில் இன, மத சிறுபான்மையினரை நேசிக்கிறது. அசாத்தின் வீழ்ச்சிக்கு பிறகு சிரியா வின் குர்துகள், ட்ரூஸ் இனத்தவர்களை இஸ்ரேல் ஆதரிக்கிறது. இத னால் சிரிய அரசாங்கம் ட்ரூஸ் இனத்தவர்களை குறிவைத்து தாக்குகி றது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# காஸாவில் நடக்கும் போரை உடனடியாக நிறுத்துங்கள்!

**27 நாடுகள் கூட்டாக வலியுறுத்து**

லண்டன், ஜூலை 24

"காஸாவில் நடக்கும் போர் உடனடியாக முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும்", என்று இங்கிலாந்து உட்பட 27 நாடுகள் அழைப்பு விடுத்துள்ளன. அத்துடன், "அங்கு பொதுமக்களின் துன்பங்கள் மிக மோசமான நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளது", என்றும் அந்த நாடுகள் சுட்டிக் காட்டியுள்ளன.

இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, கனடா, பிரான்ஸ், இத்தாலி, ஜப்பான், நியூசிலாந்து, சுவிற்சர்லாந்து உள்ளிட்ட 27 நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களின் ஒப்பங்களுடன் வெளியான கூட்டறிக்கையிலேயே இந்த விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டறிக்கை, "காஸாவில் போர் இப்போதே முடிவுக்கு வர வேண்டும்", என்ற அறிவிப்புடன் ஆரம்பமாகிறது. அதில், "இஸ்ரேலின் உதவி விநியோக முறைமை ஆபத்தானது. உணவு, குடிதண்ணீரை தேடும் மக்களுக்கு மிகச்சிறிய அளவில் வழங்குவது, பொதுமக்களை மனிதாபிமானமற்ற முறையில் கொல்லுதல் ஆகியவற்றை கண்டிக்கிறோம்", என்றும் கூறப்பட்டுள்ளது.

காஸாவின் 21 இலட்சம் மக்களையும் மக்களையும் தெற்கு ரஃபா நகரின் "மனிதாபிமான நகரம்" என்று அழைக்கப்படும் இடத்துக்கு மாற்றுவதற்கான இஸ்ரேலிய முன்மொழிவுகள் ஏற்றுக்கொள்ள முடியாதவை. "நிரந்தரமாக - கட்டாயமாக இடம்பெயரச் செய்வது சர்வதேச மனிதாபிமான சட்டத்தை மீறுவதாகும்", என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தானுடனான ரி -20; தொடர் பங்களாதேஷ் வசம்

மிர்பூர், ஜூலை 24

பாகிஸ்தானுடனான ரி - 20 தொடரில் இரண்டாவது போட்டியிலும் த்ரில் வெற்றி பெற்று பங்களாதேஷ் அணி தொடரை கைப்பற்றியது.


பாகிஸ்தான் அணி பங்களாதேஷுக்கு சென்று 3 போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடரில் விளையாடி வருகிறது. முதல் போட்டியில் பாகிஸ்தான் தோல்வியடைந்தது. இந்த நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது ரி - 20 போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில், நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணி களத்தடுப்பைத் தெரிவு செய்தது. முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய பங்களாதேஷ் அணி 20 ஓவர் முடிவில் 133 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. அதிகபட்சமாக ஜகர் அலி 55 ஓட்டங்களை குவித்து ஆட்டமிழந்தார்.

பாகிஸ்தானின் பந்து வீச்சில் சல்மான் மிர்சா, அகமது டானியல், அப்பாஸ் அப்ரிடி தலா 2 விக்கெட்களை வீழ்த்தினர்.

இதனையடுத்து பாகிஸ்தான் அணி களமிறங்கியது. முதல் 6 வீரர்கள் ஒரிலக்க ஓட்டத்தில் ஆட்டமிழந்தனர். இதில் 3 வீரர்கள் டக் அவுட் ஆகி ஏமாற்றம் அளித்தனர். இதனால் பாகிஸ்தான் அணி 47 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்களை இழந்து திணறியது.

இதனை தொடர்ந்து பஹீம் அஷ்ரப்- அப்பாஸ் அப்ரிடி இணைந்து அணியை சரிவில் இருந்து மீட்டனர்.



இருவரும் அதிரடியாக விளையாடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினர். அப்பாஸ் 19 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். கடைசி வரை போராடிய பஹீம் அஷ்ரப் 51 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.


இதனால் பாகிஸ்தான் அணி 19.2 ஓவரில் 125 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. இதன் மூலம் பங்களாதேஷ் அணி 8 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று தொடரையும் கைப்பற்றியது.

இரு அணிகளுக்கும் இடையேயான 3-வது மற்றும் கடைசி ரி -20 போட்டி இன்றைய தினம் நடைபெறவுள்ளது. (ஐ)

# அதிக கோல்கள் அடித்த வீரர் முதலிடம் பிடித்தார் மெஸ்ஸி

வாஷிங்டன், ஜூலை 24

உதைபந்தாட்ட வரலாற்றில் பெனால்டி அல்லாமல் அதிக கோல்கள் அடித்த வீரர் என்ற சாதனையை ஆர்ஜென்ரீனாவின் மெஸ்ஸி படைத்துள்ளார். போர்த்துக் கல்லின் கிறிஸ்ரியானோ ரொனால்டோவை பின் தள்ளி அவர் இந்த சாதனையை படைத்துள்ளார்.



பெனால்டி அல்லாமல் மெஸ்ஸி 764 கோல்களையும் ரொனால்டோ 763 கோல்களையும் அடித்துள்ளனர். அத்துடன், ரொனால்டோவைவிட 167 போட்டி களுக்கு முன்பாக இந்த மைல்கல்லை மெஸ்ஸி எட்டியுள் ளார்.

கடந்த திங்கட்கிழமை நடந்த இன்ரர் மியாமி, என். வை. ரெட் புல்ஸ் அணிகளுக்கு இடையேயான போட்டியில் மெஸ்ஸி 2 கோல்களை அடித் தார். இதன் மூலம் அவர் இந்த சாதனையை படைத்துள்ளார்.

கழக அணிகளில்மெஸ்ஸி அமெரிக்காவின் இன்ரர் மியாமி அணிக்காகவும் ரொனால்டோ சவூதியின் அல் நசர் அணிக்காகவும் விளையாடி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தென்னாபிரிக்காவைவீழ்த்தியது நியூசிலாந்து



ஹராரே, ஜூலை 24

முத்தரப்பு இருபது - 20 போட்டியில் தென்னாபிரிக்கா அணியை 7 விக்கெட்களால் வெற்றி கொண்டது நியூசிலாந்து அணி.

சிம்பாவே, தென்னாபிரிக்கா, நியூசிலாந்து ஆகிய நாடுகளிடையேயான முத்தரப்பு இருபது - 20 கிரிக்கெட் தொடர் சிம்பாவேயின் ஹராரே நகரில் நடக்கிறது.

இதில் ஒவ்வோர் அணியும் மற்ற அணியுடன் தலா இரு முறை மோத வேண்டும். லீக் சுற்று முடிவில் முதல் இரு இடங்களை பிடிக்கும் அணிகள் இறுதிப்போட்டிக்கு முன்னேறும். இதில் தென்னாபிரிக்கா மற்றும் நியூசிலாந்து அணிகள் ஏற்கனவே இறுதிப்போட்டிக்கு முன்னேறி விட்டன. இந்நிலையில், நேற்று முன்தினம் 5ஆவது லீக் போட்டியில் தென்னாபிரிக்கா, நியூசிலாந்து அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்க அணி பந்துவீச்சை தெரிவு செய்தது. இதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி, நியூசிலாந்தின் பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் சீரான இடைவெளியில் விக்கெட்களை பறிகொடுத்தது.

இதனால் தென்னாபிரிக்கா அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்களை இழந்து 134 ஓட்டங்கள் எடுத்தது. அதிகபட்சமாக ரீசா ஹெண்ட்ரிக்ஸ் 41 ஓட்டங்கள் எடுத்தார்.

நியூசிலாந்து தரப்பில் ஜேக்கப் டஃபி, மில்னே, சாண்ட்னர் ஆகியோர் தலா 2 விக்கெட்களை கைப்பற்றினர்.

இதனையடுத்து நியூசிலாந்து அணி களமிறங்கியது. தொடக்க வீரர் கொன்வே 19 ஓடடங்களிலும் ரச்சின் ரவீந்திரா 3, மார்க் சேப்மன் 10 என்று ஆட்டமிழந்தனர். சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய ரிம் சீபர்ட் 66 ஓட்டங்கள் எடுத்து கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இதனால் நியூசிலாந்து அணி 15.5 ஓவரில் 3 விக்கெட்களை மட்டும் இழந்து 135 ஓட்டங்கள் எடுத்து 7 விக்கெட்களால் வெற்றி பெற்றது. (ஐ)


# சம்பியன்ஸ் லீக் தொடரை மீண்டும் நடத்த முயற்சி!

மும்பை, ஜூலை 24

சபியன்ஸ் லீக் ரி -20 கிரிக்கெட் தொடரை மீண்டும் நடத்த சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ. சி. சி.) முடிவு செய்துள்ளதாகத் தெரியவந்துள்ளது. 2009ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட சம்பியன்ஸ் லீக் ரி -20 கிரிக்கெட் தொடர் 2014ஆம் ஆண்டு வரை நடைபெற்றது.

ரசிகர்களின் போதிய ஆதரவின்மை, அனுசரணை இன்மையால் 2015ஆம் ஆண்டு இந்தத் தொடரை நிறுத்துவதாக ஐ. சி. சி. அறிவித்தது. இந்நிலையில் சம்பியன்ஸ் லீக் ரி - 20 தொடரை மீண்டும் நடத்த ஐ. சி. சி. அனுமதி அளித்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. அடுத்த ஆண்டு செப்ரெம்பரில் இந்தத் தொடர் நடைபெற வாய்ப்புள்ளதாகவும் ஐ. சி. சி. வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

உலகம் முழுவதும் நடைபெறும் ரி - 20 லீக் தொடர்களில் சம்பியன் பட்டம் வெல்லும் அணிகள் இந்த தொடரில் பங்கேற்கவுள்ளன. கடைசியாக நடைபெற்ற சம்பியன்ஸ் லீக் ரி-20 தொடரில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி பட்டம் வென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



# கனடா ஓபின் ரென்னிஸ் அலகராஸூம் விலகல்!

ரொறன்ரோ, ஜூலை 24

கனடா ஓபின் ரென்னிஸ் தொடரிலிருந்து முன்னிலை வீரர்களில் ஒருவரான கார்லோஸ் அல்காரஸூம் விலகியுள்ளார்.

முன்னணி வீரர், வீராங்கனைகள் பங்கேற்கும் கனடா ஓபின் சர்வதேச ரென்னிஸ் தொடர் ரொறன்ரோ நகரில் அடுத்த வாரம் தொடங்குகிறது.

இந்நிலையில், முன்னிலை வீரரான ஸ்பெயினின் கார்லோஸ் அல்காரஸ் இந்தத் தொடரில் இருந்து விலகியுள்ளார்.

இந்த தொடரில், இருந்து ஏற்கனவே, முதல்நிலை வீரரான இத்தாலியின் ஜன்னிக் சின்னர், 5ஆவது நிலை வீரரான செர்பியாவின் நோவக் ஜோகோவிச் மற்றும் பிரிட்டனின் ஜாக் டிராபர் ஆகியோர் விலகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரலாற்றை....

என்ற பெயரில் அரசாங்கம் இவ்வாறான செயல்பாடுகளில் ஈடுபடுகிறது.

"ஜே. வி. பி. அரசாங்கத்துக்கு இனவாதம் இல்லை என்றால், இன்றைய தினம் கறுப்பு ஜூலையை நினைவு கூர்ந்திருக்க வேண்டும். இன்றைய தினத்தை சகலரும் நினைவுகூரும் தினமாக தற்போதைய அரசாங்கம் மாற்றியமைத்திருக்க வேண்டும். எனினும், இதற்கு மாறாக வரலாற்றை மறைக்கவும் மாற்றியமைக்கவும் தற்போதைய அரசாங்கம் முயல்கிறது. உத்தியோகபூர்வ மன்னிப்பு இதுவரையில் கேட்கப்படாத நிலையில் வடக்கு - கிழக்கில் தமிழ் மக்கள் கறுப்பு ஜூலையை நினைவு கூருகிறார்கள்" - என்று நேற்றைய தினம் பாராளுமன்றில் உரையாற்றியபோது அவர் குறிப்பிட்டார். (ஐ)

## அறிக்கை...

பௌசான் இந்த உத்தரவை பிறப்பித்தார்.

அத்துடன், மனித எச்சங்கள் மீட்கப்பட்ட பகுதியில் மிதிவெடி அகற்றும் பணி நடைபெறுவதால் அது தொடர்பில் குறித்த நிறுவனத்துடன் கலந்துரையாடி சட்ட மருத்துவ அதிகாரியை அறிக்கை சமர்ப்பிக்குமாறும் குறித்த பகுதியில் மயானம் ஏதும் காணப்பட்டதா என்பது தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு தொல்பொருள் திணைக்களத்துக்கும் உத்தரவிடப்பட்டது. இரு தரப்பினரும் எதிர்வரும் 30ஆம் திகதி நீதிமன்றில் அறிக்கைகளை சமர்ப்பிக்குமாறும் உத்தரவிடப்பட்டது.

சம்பூர் சிறுவர் பூங்காவை அண்மித்த பகுதியில் மிதிவெடி அகற்றும் பணி நடைபெற்று வருகிறது. இந்த நிலையில், கடந்த ஞாயிற்றுக்கிழமை மனித மண்டை ஓடும் எலும்புகள் சிலவும் கண்டுபிடிக்கப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நேற்றும்...

புதைகுழியில் இரண்டாவது கட்டமாக அகழ்வு முன்னெடுக்கப்படுகிறது. இடைவெளியின் பின்னர் மூன்றாவது நாளாகத் தொடரும் அகழ்வில் இதுவரை 20 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இந்த நிலையிலேயே இரு அகழ்வாய்வு தளங்களிலும் நேற்றைய தினம் 5 மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டன. அத்துடன், 2 மனித எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. நேற்றுடன் புதைகுழியிலிருந்து 67 மனித எலும்புக்கூடுகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, நேற்றுமுன்தினம் அடையாளம் காணப்பட்ட குழந்தைகள் பால்குடிக்கும் (சூப்பி) போத்தல், சிறுவர்களின் காலணிகள், ஆடைகள் வரும் நாட்களில் மீட்கப்பட்டு நீதிமன்ற கட்டுக்காவலில் வைக்கப்படும் என்று கூறப்படுகிறது. (ஐ)

## ரணில்...

இதன் மூலம் அடிப்படை உரிமைகள் - சுதந்திரம் குறைக்கப்பட்டதாக நீதிமன்றம் கருதுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

எனினும், நீதியரசர் அர்ஜூன ஒபேசேகர வேறுபட்ட தீரப்பை வழங்கியுள்ளார். "இந்த விதிமுறைகள் அடிப்படை மனித உரிமைகளை மீறவில்லை", என்று அவர் தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வழக்குகளை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன், மாற்று கொள்கைகளுக்கான மத்திய நிலையம், லிபரல் இளைஞர் இயக்கம் என்பன தொடுத்திருந்தன.

மனுதாரர்களுக்கு சட்டச் செலவுகளை செலுத்துமாறும் அரசாங்கத்துக்கு உயர் நீதிமன்றம் தனது தீர்ப்பில் உத்தரவிட்டுள்ளது. (ஐ)

## கொழும்பில்...

இந்தக் குழுவினர் நேற்று பிற்பகல் யாழ்ப்பாணத்தை வந்தடைந்த னர்.

இந்த ரயில் வரும் வழியில் குருநாகல், அநுராதபுரம், வவுனியாவில் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

ரயிலில் வந்தவர்கள் யாழ்ப்பாணம் புகையிரத நிலைய நூலகத்துக்கு ஒரு தொகை நூல்களை வழங்கினர். இதன் பின்னர் மரக்கன்றும் நாட்டப்பட்டது.

பின்னர், பேரணியாக ரிம்பர் மண்டபத்துக்கு சென்ற குழுவினர் அங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கலை நிகழ்வுகளை கண்டுகளித்தனர்.

இந்தக் குழுவினருடன், கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரர், இளைஞர் விவாகார அமைச்சர் ஏரங்க குணசேகர, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

இன்றைய தினம் எழுவைதீவு செல்லும் குழுவினர் 200 பனங்கன்றுகளை நடுகை செய்யவுள்ளனர். அத்துடன், எழுவைதீவு பாடசாலைக்கான அபிவிருத்தி நடவடிக் கைகள், தீவக விளையாட்டு கழகங்களுக்கு உபகரணங்களையும் வழங்கவுள்ளன. (ஐ)

## பாரம்பரிய...

அவர் சுட்டிக்காட்டினார்.

2026 ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ள புதிய கல்விச் சீர்திருத்தம் குறித்து நேற்று கல்வி அமைச்சர் நடத்திய ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் பரீட்சைக்கு தயாராகும் முறைக்கு நாம் பழக்கப்பட்டிருக்கிறோம். ஆனால், இந்தத் தொகுதி முறையில் பல்வேறு செயல்பாடுகளின் மூலம் கற்றுக்கொள்ளவும் மதிப்பீடு செய்யப்படவும் வாய்ப்புகள் கிடைக்கின்றன.

புதிய பாடத்திட்ட வழிகாட்டுதலின்படி, க. பொ. த சாதாரண தரப் பரீட்சை 2029 ஆம் ஆண்டிலேயே நடத்தப்படும். 2026ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்படும் சீர்திருத்தத்தின் கீழ், 1 ஆம் வகுப்பு மற்றும் 6 ஆம் வகுப்புகளுக்கு மட்டுமே புதிய கல்வித் திட்டம் கற்பிக்கப்படும். இந்த சீர்திருத்தத்தை கண்காணிக்க 3 ஆண்டுகள் அவகாசம் இருப்பதால், எதிர்காலத்தில் ஏற்படும் நிலைமைகளுக்கு ஏற்ப மாற்றங்களைச் செய்யப்போதுமான கால அவகாசம் இருக்கிறது. இந்த சீர்திருத்தம் இறுதியானது என்று கூற முடியாது.

ஒரு வகுப்பறையில் கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கையை 25 - 30 ஆகக் குறைக்க வேண்டும் என்பதே இலக்கு. தற்போது 40இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கும் வகுப்பறைகள் உள்ளன. கல்வி அமைச்சர் மற்றும் செயலாளரின் உத்தரவின்படி அதிக மாணவர்களை வகுப்பறைகளுக்குள் உள்வாங்கும் முறை தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் நிர்ணயிக்கப்பட்ட மாணவர் எண்ணிக்கை மட்டுமே உள்வாங்கப்படும்.

ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையை இரத்து செய்வது குறித்து இதுவரை எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. அவ்வாறு செய்வதற்கு முன், பாடசாலைகளுக்கு இடையிலான ஏற்றத்தாழ்வுகளை முதலில் நீக்க வேண்டும். இது உடனடியாக செய்யக்கூடிய காரியமல்ல. புலமைப்பரிசில் பரீட்சையால் மாணவர்களுக்கு ஏற்படும் அழுத்தத்தைக் குறைத்து, கல்வி முறையின் சுமையைக் குறைப்பதே சீர்திருத்தத்தின் நோக்கம்.

முன்பள்ளி குழந்தைப் பருவ வளர்ச்சி மையங்களை நடத்துவது மற்றும் அங்குள்ள ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிப்பது குறித்த முழுமையான கண்காணிப்பை கல்வி அமைச்சகம் மேற்கொள்ள வேண்டும் என்றும் இந்த சீர்திருத்தம் பரிந்துரைக்கிறது - என்றும் கூறினார். (ஐ)

# வெலிக்கடை சிறை குறித்து விசாரணை நடத்துங்கள்!

## செல்வம் எம். பி. கோரிக்கை

கொழும்பு, ஜூலை 24

"தலைவர் தங்கத்துரை, தளபதி குட்டிமணி உள்ளிட்டோர் கொடூரமாக கொலை செய்யப்பட்ட வெலிக்கடை படுகொலை சம்பவம் தொடர்பில் அரசாங்கம் விசாரணை நடத்த வேண்டும்", என்று ரெலோவின் தலைவரும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும், "வெலிக்கடை சிறைச்சாலையில் கண்கள் பிடுங்கப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டே தோழர்கள் கொலை செய்யப்பட்டார்கள். அவர்கள் எங்கே புதைக்கப்பட்டார்கள் என்பதை அறியமுடியாமல் உள்ளது. எனவே, கடந்தகால கொலைகள் பற்றி விசாரிக்கும் இந்த அரசாங்கம், வெலிக்கடை படுகொலை பற்றியும் விசாரிக்க வேண்டும். ஜே. ஆர். ஜெயவர்த்தன ஆட்சிக் காலத்திலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது."- என்றும் அவர் கூறினார். (ஐ)

# பிரதம நீதியரசராக சூரசேன அரசமைப்பு பேரவை அங்கீகாரம்



கொழும்பு, ஜூலை 24

நாட்டின் அடுத்த பிரதம நீதியரசராக உயர் நீதிமன்ற நீதியரசர் பிரீத்தி பத்மன் சூரசேனவை நியமிக்கும் பரிந்துரைக்கு அரசமைப்பு பேரவை ஒருமனதாக அங்கீகரித்துள்ளது.

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க, பிரீத்தி பத்மன் சூரசேனவின் பெயரை சமீபத்தில் அரசமைப்பு பேரவைக்கு சமர்ப்பித்தார்.

அதன்படி, இன்று கூடிய அரசமைப்பு பேரவையால் ஜனாதிபதியின் பரிந்துரை அங்கீகரிக்கப்பட்டது. (ஐ)

## காங்கேசன்...

துறைக்குப் பொறுப்பான அமைச்சர் பிமல் ரத்நாயக்காவிடம் இந்தக் கேள்வியை எழுப்பியிருந்தார் சிறீதரன்.

அவர் மேலும் தனது உரையில்,

நாட்டின் கேந்திரமுக்கியத்துவம் வாய்ந்த துறைமுகங்களில் காங்கேசன் துறை துறைமுகம் போருக்கு முற்பட்ட காலத்தில் மிகச்சிறப்பாக இயங்கி வந்துள்ளது. அந்த அடிப்படையில் காங்கேசன்துறை துறைமுகத்தை வர்த்தக நோக்கத்துக்கான துறைமுகமாக புனரமைப்பதன் மூலம் இந்தியாவுக்கு அதிலும் குறிப்பாக தென்னிந்தியாவுக்கும் வடக்கு - கிழக்கு பகுதிகளுக்குமான பொருள் பரிமாற்றம்சார் வர்த்தக நடவடிக்கைகளிலும் சுற்றுலா பயணிகளின் வருகையிலும், அந்நிய செலாவணியை ஈட்டுவதிலும் பெரும் மாற்றத்தை ஏற்படுத்த முடியும்.

2009 வரையான 30 ஆண்டுகால யுத்தம், பிற்பட்ட 15 ஆண்டுகள் என கிட்டத்தட்ட 45 ஆண்டுகள் அபிவிருத்தியில் பின்தங்கியுள்ள வடக்கு, கிழக்கு மாகாணங்களின் பொருளாதார வளர்ச்சியிலும், இலங்கையின் மொத்த தேசிய உற்பத்தியின் கடைசி பங்காளியாகவுள்ள வடக்கு மாகாணத்தின் பங்களிப்பை அதிகரிக்கவும் காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி முக்கியத்துவம் பெறுகிறது.

இந்தத் துறைமுக அபிவிருத்திக்காக 65 மில்லியன் அமெரிக்க டொலரை வழங்க இந்தியா முன்வந்துள்ளது. மீளச் செலுத்தும் தேவையற்ற இந்த நிதி உதவி மூலம் மேற்படி துறைமுகத்தை புனரமைத்து மீள ஆரம்பிக்க முடியும் என்ற நிலையில் இத்துறைமுகத்தை மீளியக்குவதற்கான சூழலியல் தாக்க மதிப்பாய்வு அறிக்கையும் தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னரும் இந்தத் துறைமுகத்தின் அபிவிருத்தி காலம் தாழ்த்தப்படுவதற்கான காரணம் என்ன?

நாட்டின் வரலாற்றில் இந்தத் துறைமுகம் கொண்டிருந்த பொருளாதார பங்களிப்பு இப்போது இல்லாமலுள்ளது. இதனை மேம்படுத்த சுற்றுலா பயணிகளின் வருகையை அதிகரித்தல், உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதி - இறக்குமதி மூலமான அந்நிய செலாவணியை ஈட்டும் திட்டங்கள் எவையேனும் அரசிடம் உள்ளதா?

இந்தத் றைமுகத்தைப் பொறுப்பெடுக்க முன்வந்துள்ள நிலையில், புனரமைப்பு பணிகளை மேற்கொள்வதற்கு காலம் தாழ்த்தப்படுவது ஏன்? துறைமுக அபிவிருத்தியுடன் தொடர்புடைய சூழலியல் தாக்கங்கள் குறித்து இறுதிசெய்வதில் தொடர்புடைய திணைக்களங்களின் கால இழுத்தடிப்புகள் காரணமாக உள்ளனவா? காங்கேசன்துறை துறைமுகத்தின் புனரமைப்பு பணிகள் எப்போது ஆரம்பிக்கப்பட்டு முடிவுறுத்தப்படும் என்றும் சிறீதரன் கேட்டார்.

இந்தக் கேள்விகளுக்கு பதிலளிக்க அமைச்சர் பிமல் ரத்நாயக்க ஒரு வார கால அவகாசம் கோரினார்.

இதைத் தொடர்ந்து தான் இதுவரையில் எழுப்பிய 4 முக்கிய கேள்விகளுக்கு அரசோ அமைச்சர்களோ இதுவரை பதில் அளிக்கவில்லை. கால அவகாசம் மட்டுமே கோரினர் என்று சபாநாயகரின் கவனத்துக்கு சிறீதரன் எம். பி. கொண்டுவந்தார்.

இது தொடர்பில் கவனம் எடுப்பதாக சபை முதல்வருமான அமைச்சர் பிமல் ரத்நாயக்கா சிறீதரனுக்கு உறுதியளித்தார். (ஐ)

## பிள்ளையானின்...

மீறப்பட்டுள்ளன என்று தீர்ப்பளிக்குமாறு கோரி அவர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

அரசமைப்பின் பிரிவுகள் 12(1)இன்படி சட் டத்தின் முன் சமமற்ற முறையில் நடத்துதல், 12(2)இன்படி அரசியல் கருத்தின் அடிப்படையில் பாகுபாடு), 13(1)இன் படி காரணமின்றி கைது மற்றும் 13(2)இன்படி சட்டத்தின் சரியான செயல்முறை இல்லாமல் கைது ஆகிய வற்றின் கீழ் இந்த வழக்கை விசாரிக்க உயர் நீதிமன்றம் முடிவு செய்துள்ளது.

மனுதாரரான பிள்ளையான் சார்பாக ஜனாதிபதி சட்டத்தரணி மனோகர டி சில்வா, சட்டத்தரணி உதய கம்மன்பில ஆகியோர் மன்றில் முன்னிலையாகியிருந்தனர்.

பிள்ளையான் கடந்த ஏப்ரல் 8ஆம் திகதி குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டிருந்தார். பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட அவர், கிழக்கு பல்கலைக்கழக துணைவேந்தர் கடத்தப்பட்டமை தொடர்பில் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# தமிழ் மக்களின் உணர்வுகளை அரசு கொச்சைப்படுத்துகிறது

## கொழும்பு கறுப்பு ஜூலை நிகழ்வில் விசனம்

கொழும்பு, ஜூலை 23

**“தமிழ் மக்களின் உணர்வுகளை கொச்சைப்படுத்தும் விடயத்தில் ஜே. ஆர். ஜெயவர்த்தன அரசாங்கத்துக்கும் இந்த அரசாங்கத்துக்கும் இடையில் வேறுபாடு இல்லை”, என்று கொழும்பில் நேற்று நடைபெற்ற கறுப்புஜூலை நினைவுவேந்தல் தின நிகழ்வில் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

42 வருடங்களுக்கு முன்னர் கொழும்பில் தமிழ் மக்களுக்கு எதிரான கலவரம் ஆரம்பமான கனத்தை சுற்றுவட்டத்தில் கறுப்பு ஜூலை நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது.

வடக்கு - தெற்கு சகோதரத்துவ அமைப்பு ஏற்பாடு செய்திருந்த நிகழ்வில் சிவில் சமூகத்தினர் மனித உரிமை ஆர்வலர்கள் செயல்பாட்டாளர்கள் கலந்துகொண்டிருந்தனர். இதில் பங்கேற்றவர்கள்.

“சகோதரத்துவம் என்ற பெயரில் யாழில் கறுப்பு ஜூலை வாரத்தில் அரசாங்கம் முன்னெடுக்கும் நிகழ்வு ஏமாற்றமளிக்கிறது. தமிழ் மக்கள் நீதி வேண்டி நிற்கின்ற இந்தத் தருணத்தில் அவர்களுக்கு நீதி வழங்குவதற்கு பதில் அரசாங்கம் சகோதரத்துவம் என்ற பெயரில் ஆடல்பாடல்களில் ஈடுபடுகிறது.

“கறுப்பு ஜூலை என்பது தமிழ் மக்களைப் பொறுத்தவரை மிகவும் உணர்வுபூர்வமான விடயம். ஆனால், தமிழ் மக்களின் உணர்வுகளை கொச்சைப்படுத்தும் விதத்தில் அரசாங்கம் நிகழ்வுகளை நடத்துகிறது. தமிழ் மக்களின் உணர்வுகளை கொச்சைப்படுத்தும் விடயத்தில் ஜே. ஆர். ஜெயவர்த்தன அரசாங்கத்துக்கும் இந்த அரசாங்கத்துக்கும் இடையில் வேறுபாடு இல்லை - என்றும் அவர்கள் கூறினர். (ஐ)

# சபாநாயகரை வாயை மூட கோரிய ரோஹினி!

## பாராளுமன்றில் சலசலப்பு!

கொழும்பு, ஜூலை 24

தலதா மாளிகைக்கு முன்பாக மூடப்பட்டுள்ள வீதி தொடர்பாக ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி கவிரத்ன எழுப்பிய கேள்வியை தொடர்ந்து பாராளுமன்றத்தில் அமைதியின்மை ஏற்பட்டது.

பாராளுமன்றத்தில் நேற்று வாய்மொழி மூல விடைக்கான கேள்வி நேரத்தின்போது, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரிடம் அவர் இந்த கேள்வியை எழுப்பினார்.

தலதா மாளிகை மீதான ஒரு தாக்குதல் மற்றும் விடுதலை புலிகள் நடத்திய தாக்குதலின் பின்னர் குறித்த வீதி, மூடப்பட்டது.

தற்போது வட பகுதியில் உள்ள பல வீதிகள் திறக்கப்படுவதுடன் காணிகளும் விடுவிக்கப்படுகின்றன.

தலதா மாளிகைக்கு முன்பாகவுள்ள வீதி இன்றுவரை வாகன போக்குவரத்துக்காக திறக்கப்படாமல் உள்ளமையானது, கண்டி நகரின் வளிமாசடைவுக்கு பாரியளவில் பங்களிப்பதாக சுற்றாடல் ஆர்வலர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

நாட்டில் தற்போது பரவலாக துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் இடம்பெறும் நிலையில், தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை என அரசாங்கம் கூறுகிறது என பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி கவிரத்ன தெரிவித்தார்.

அதன்போது, குறுக்கிட்ட சபாநாயகர், சுற்றிவளைக்காமல் கேள்வியை மட்டும் கேட்டுமாறு அறிவுறுத்தினார்.

இதனையடுத்து,

கருத்துவெளியிட்ட ரோஹினி கவிரத்ன, இந்த விடயங்களை விபரிக்காமல் கேள்விகளை எழுப்ப முடியாத என தெரிவித்திருந்தார்.

எனினும், சபாநாயகர் தொடர்ந்தும் குறுக்கிட்ட தால் வாயை மூடிக் கொண்டு, தாம் கூறுபவைகளை செவிமடுக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி கவிரத்ன தெரிவித்ததையடுத்து, பாராளுமன்றத்தில் அமைதியின்மை ஏற்பட்டது.

அதன்போது, சபாநாயகர் சபை நாகரீகத்துடன் கருத்துகளை வெளியிடுமாறு எச்சரித்திருந்த நிலையில், ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினரும் பிரதியமைச்சருமான மஹிந்த ஜயசிங்க, ரோஹினி கவிரத்னவின் கருத்துக்கு கண்டனம் வெளியிட்டதுடன் அதனை மீளப் பெறுமாறு கோரியிருந்தார்.

இந்தநிலையில் பாராளுமன்றத்தில் தொடர்ந்தும் அமையின்மையின்மை நிலவியது.

எவ்வாறாயினும், தலதா மாளிகைக்கு முன்பாகவுள்ள வீதி மீள திறக்கப்ப டாமைக்கு காரணமாக என்னவென ரோஹினி கவிரத்ன வினவியிருந்தார்.

அத்துடன், தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இல்லை என்றால் தலதா மாளிகைக்கு முன்பாக, மூடப்பட்டுள்ள வீதியை அரசாங்கம் திறக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார்.

அதற்கு பதிலளித்த பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால, குறித்த வீதி மூடப்பட்டு 36 வருடங்கள் ஆகின்றமையினால் பொலிஸாரிடம் அது தொடர்பாக போதிய தகவல்கள் இல்லை என தெரிவித்தார். (அ)

# இலங்கை-இந்தியா இடையே இவ்வருடம் 17,000 பேர் பயணம்

கொழும்பு, ஜூலை 24

இலங்கை மற்றும் இந்தியா இடையிலான பயணிகள் கப்பல் சேவை ஊடாக இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில், 17,000 பேர் இரு நாடுகளுக்கும் இடையில் போக்குவரத்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக, போக்குவரத்து பிரதி அமைச்சர் ஜனித ருவன் கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

இரண்டு நாடுகளுக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை 2023 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 14 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட நிலையில், தற்போது 2 கப்பல்கள் சேவையில் ஈடுபடுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எனினும்,

இறங்குதுறை தொடர்பான பிரச்சினையுள்ள நிலையில், அதற்கு இந்தியா உதவத் தயாராக இருப்பதாகவும் போக்குவரத்து பிரதி அமைச்சர் ஜனித ருவன் கொடித்துவக்கு தெரிவித்தார். (அ)

# பாதாள உலக குழுக்களுக்காக வாகனம் திருடியவர் கைது!

கொழும்பு, ஜூலை 24

முச்சக்கர வண்டிகளை திருடி குற்றச்செயல்களுக்கு பயன்படுத்துவதற்காக பாதாள உலக குழுக்களுக்கு கொடுத்ததாகக் கூறப்படும் சந்தேகநபர் ஒருவர் பாணந்துறை பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

களுத்துறை - பாணந்துறை பொலிஸார் நடத்திய சுற்றிவளைப்பிலேயே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

கைதானவர் போதைப்பொருள் கடத்தல்காரரான “குடு சலிந்து” என்பவருடன் நெருங்கிய தொடர்புகளை பேணி வருபவர் என்று கூறப்படுகிறது. (ஐ)

# சொகுசு மோ. சைக்கிள்களுடன் சந்தேகநபர் ஒருவர் கைது!

கொழும்பு, ஜூலை 24

4 சொகுசு மோட்டார் சைக்கிள்களுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குருநாகல் - வாரியபொல பொலிஸ் பிரிவிலேயே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபர்களிடமிருந்து 3 சொகுசு மோட்டார் சைக்கிள்களும் போலி இலக்கத்தகடு பொருத்தப்பட்ட ஒரு சொகுசு மோட்டார் சைக்கிளும் கைப்பற்றப்பட்டன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வாரியபொல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# இலங்கையில் காயங்களினால் ஆண்டுதோறும் 12,000 பேர் பலி!

கொழும்பு, ஜூலை 24

இலங்கையில் காயங்களால் ஆண்டுதோறும் 12,000 பேர் உயிரிழக்கின்றனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

காயங்கள் காரணமாக ஆண்டுதோறும் ஒரு மில்லியனுக்கும் அதிகமானோர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவதாகவும் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

சுகாதார அமைச்சின் அறிக்கையின்படி,15 முதல் 65 வயதுக்குட்பட்டவர்களே காயங்களால் பெரும்பாலும் உயிரிழக்கின்றனர்.

சுகாதார நிபுணர்களின் கூற்றுப்படி, இவ்வாறான காயங்கள் பெரும்பாலும் முறையான பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் சரியாக செயற்படுவதன் மூலம் தவிர்க்கக்கூடியவை.

குறிப்பாக, காயங்கள் ஏற்பட்டதும் உடனடியாக அடிப்படை முதலுதவி அளிப்பது மனித உயிர்களை காப்பாற்றுவதிலும் சிக்கல்களை குறைப்பதிலும் முக்கிய பங்கு வகிக்கிறது.

மேலும், இது தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் ஊடகத் துறையினரும் முக்கிய பங்கை வகிக்கவேண்டும் என அமைச்சு வலியுறுத்தியுள்ளது.

விபத்துகளின் மூலக் காரணங்களைப் பற்றியும், முதலுதவியின் அவசியத்தை பற்றியும் மக்களிடையே எடுத்துரைப்பது பாதுகாப்பான சமுதாயத்திற்கான கட்டமைப்பை உருவாக்க உதவும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# தனியார் ஊழியரின் அடிப்படைச் சம்பளம் ஜனவரி முதல் 30 ஆயிரம் ரூபாவாக உயரும்

கொழும்பு, ஜூலை 24

புதிய சட்ட திருத்தத்தின் மூலம் தனியார் துறையின் அடிப்படை சம்பளம் கடந்த ஏப்ரல் முதலாம் திகதி முதல் 27 ஆயிரம் ரூபாவாக அதிகரிப்பதுடன் ஜனவரி முதலாம் திகதி முதல் அது 30 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்படும். அதேபோன்று தோட்டத் தொழிலாளர்களுக்கும் மாதச் சம்பள அடிப்படையில் வழங்க நடவடிக்கை எடுப்போம் என வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- வங்குரோத்து அடைந்த பொருளாதாரத்தையே நாங்கள் பெற்றுக் கொண்டபோதும் தற்போது நாட்டின் பொருளாதாரம் படிப்படியாக அதிகரித்து வருகிறது. அதனால் அரச ஊழியர்கள், தனியார்துறையினர் மற்றும் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு மேற்கொள்ள முடியுமாக இருக்கிறது. கஷ்டமான விடயமாக இருந்தாலும் இதனை நாங்கள் செய்திருக்கிறோம்.

தனியார் துறையின் சம்பள அதிகரிப்பை சட்ட ரீதியில் அனுமதித்துக்கொள்ளவே தற்போது இந்த சட்டமூலம் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பித்திருக்கிறோம். அதன் பிரகாரம், இந்த சட்டமூலம் அனுமதிக்கப்பட்டது முதல் தனியார் துறையினருக்கு அதிகரித்திருக்கும் அடிப்படைச் சம்பளம் கட்டாயமாக்கப்படுகிறது. அதன் பிரகாரம் அரசாங்கம் கடந்த வரவு - செலவு திட்டத்தில் தனியார் துறையினரின் அடிப்படை சம்பளத்தை 27ஆயிரம் ரூபாவாக நிர்ணயித்தது. தற்போது தனியார் துறையினர் தங்களின் சேவை நிலையங்களில் இந்த 27 ஆயிரம் ரூபா அடிப்படை சம்பளத்தை பெற்றுக்கொள்ள முடியுமாகிறது.

ஏப்ரல் மாதத்தில் இருந்தே இந்த அதிகரிப்பு மேற்கொள்ளப்பட வேண்டும். அதனால் ஏப்ரல் மாதம் இந்த அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்காவிட்டால், அவர்களுக்கு மீதி சம்பளத்துடன் பெற்றுக் கொள்ளும் உரிமை இதன் மூலம் கிடைக்கிறது.

அதேபோன்று வரவு - செலவு திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு சம்பளம் அதிகரிக்கப்படும்போது தனியார் துறையினருக்கும் அது கொடுப்பனவாகவே வழங்கப்படுகிறது. அதனால் இதுவரை காலமும் வரவு - செலவு கொடுப்பனவாக வழங்கப்பட்டுவந்த 1000 ரூபா மற்றும் 2500 ரூபா ஆகிய இரண்டு கொடுப்பனவும் அடிப்படை சம்பளத்தில் சேர்க்கப்படுகிறது.

மேலும், தனியார் துறைக்கு அதிகரிக்கப்பட்டிருக்கும் இந்த 27ஆயிரம் ரூபா அடிப்படை சம்பளம் எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி முதல் 30ஆயிரமாக அதிகரிக்க அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. அதன் பிரகாரம் ஜனவரி மாதம் முதல் தனியார் துறைக்கு 30ஆயிரம் ரூபா அடிப்படைச் சம்பளமாக வழங்கப்படவேண்டும்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 24.07.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.